ISSN 1391-9504




பன்முக அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தயாரிப்பு - நவசீலன்

# தலைகொடுத்துப் பாடிய பிரபந்தம்

கண்ட கண்ட இடங்களில் தாறுமாறாக அறுபட்டுக் கிடந்த உடல்களெல்லாம் அதனதன் தலைகளைத் தேடி வந்து ஒட்டிக் கொண்டு உயிர் பெற்றெழுந்தவுடன் அங்கு மிகுந்த மகிழ்ச்சியெழுந்தது.

பின்னர் ஒட்டக்கூத்தர் கலைவாணியைப் பிரார்த்தித்து மற்றுமொரு பாடலைப் பாடினார். பூர்வகாலத்தில் லோகரட்சகராகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர், திரௌபதைக்கு ஆடையளித்து மானம் காத்தார். பரமாத்மாவின் அந்தச் சாமர்த்திய சக்தியை ஒட்டக்கூத்தர் நினைவு கூர்ந்தார்.

துரியோதனின் அரசவையில், துச்சாதனன் எழுந்து அபலையாக நிற்கும் அன்னை பாஞ்சாலியின் துகிலை உரிகிறான். பஞ்சபாண்டவரும் மற்றும் அறங்கூறும் ஏனையோரும் இந்தக் கொடூரமான காட்சியைப் பார்த்துக் கொண்டு எதுவுமே செய்யமுடியாத நிலையில் இருக்கின்றனர்.

அன்னை பாஞ்சாலி அந்தக் கொடியவனின் கொடும் செயலில் இருந்து தன் மானத்தைக் காத்துக் கொள்ள முயன்று இறுதியில் அவரால் இயலாத நிலையில் தன் கைகள் இரண்டையும் உயர்த்திக் "கண்ணா, இனி நீயே எனக்குக் கதி. என் மானத்தைக் காத்து அருள்புரிவாயாக" என்று அந்தப் பரமாத்மாவை வணங்குகிறார்.

அதனையடுத்துத் துச்சாதனன் ஒரு துகிலை உரிய உள்ளே இன்னொரு துகில். அதனையும் உரிய உள்ளே இன்னொரு துகில். இப்படியே துச்சாதனன், துகில்களை உரிய உரியத் துகில்களாகவே வந்து குவிந்து துகில் மலைபோல் காட்சியளிக்கத் துச்சாதனன் சோர்ந்து விழுகிறான்.



அன்னை பாஞ்சாலியின் துகில் உரிந்த அவன் கைகளும் இயங்காமல் போகின்றன. இப்படிப் பரமாத்மாவைச் சரணடைந்த பாஞ்சாலியின் மானம் காக்கப்படுகிறது.

அந்த ஜகத்காரனாகிய பரமாத்மாவின் சாமர்த்திய சக்திக்கு அது ஒரு பாரிய விஷயமாகாது! ஆனால் இந்தச் செங்குந்தர்கள் சகல தேசங்களிலும் நானா சாதியாரும் கேவலம் மிருகங்களைப் போல் நிர்வாணமாயிருந்து பங்கப்படாமல் இருக்கும் வகையில் அவர்களுக்கேற்ற வஸ்திரங்களை உற்பத்தி செய்து கொடுத்து அபிமானம் காத்தார்கள். அந்த வஸ்திரங்களை வணிகர்கள் கையில் கொடுத்து "இவற்றை நீங்கள் விற்பனை செய்து பிழையுங்கள்" என்று அவர்களுக்கு ஜீவனோபாயம் கற்பித்தார்கள்.

[illegible] புலவர்கள் பலரும் பாடிய தமிழ்ப் பாமாலைகளுக்குப் பரிசாகப் பெருமளவு திரவியம் கொடுத்தார்கள். அவைகளெல்லாம் அதிசயமல்லவென்று நான் பாடிய "ஈட்டியெழுபது" என்னும் பிரபந்தத்துக்குப் பெருவிலையாகத் தங்கள் தலையையும் கொடுத்தார்கள். இறுதியில் சாதாரண பொற்கொல்லன் ஒருவன் தன்னால் இயன்ற மட்டும் முயற்சித்து உருவாக்கிய பொன் ஆபரணத்தைச் சமர்த்தனாகிய மற்றொருவன் தன் கைத்திறம் வெளிப்படும் வகையில் திருத்திச் செய்து, மணி பதித்து மெருகூட்டிக் கொடுத்தது போல நெடுநாட்களாகச் சிறப்பின்றி வழங்கப்பட்டு வந்த கூத்தன் என்னும் எனது இயற்பெயரை அற்ற தலையும், உடலும் ஒட்டப்பாடிய காரணம் புலப்பட "ஒட்டக்கூத்தன்" என்று விளங்கச் சிறப்பித்துக் கொடுத்தார்கள் என்னும் கருத்து விளங்கப் பின்வருமாறு பாடினார்.

"நிலைதந்தார் புவியினுக்கே யாவருக்கும்
அபிமானம் நிலைக்கத் தந்தார்
கலை தந்தார் வணிகருக்குச்
சீவனஞ்செய்
திடவென்றே கையில் தந்தார்.
விலை தந்தார் தமிழனுக்குச்
செங்குந்தர்கள் கவிக்கு
விலையாகத்தான் தலை தந்தார்
எனக் கொட்டக் கூத்தனெனும்
பெயரினையும் தாந்தந்தாரே"

இடம் பெற்ற நிகழ்வுகளையெல்லாம் கண்டும் கேட்டும் அதிசயித்த சகலரும் "இது பெரும் புதுமையாக இருக்கிறது" என்று கூறி மகிழ்ச்சியடைந்தார்கள்.

அப்பொழுது சோழமன்னன் தன் மந்திரி பிரதானிமார்களை நோக்கி "இதென்ன புதுமை?" [illegible] கேட்டார். அதற்கு அவர்கள் "ஐயா! ராஜேந்திரரே, செங்குந்தர்கள் வேளாளர் முதலியோரைப் போலத் தாங்களும் பாமாலை பெற வேண்டுமென்று கூத்தரைப் பிரார்த்தித்தனர். கூத்தர் அதற்காக மனம் துணிந்து தலை பரிசு கொடுக்க வேண்டுமென்று கேட்டதற்குக் காரணம் தமக்குச் சிறப்புப் பெயரும், தங்கள் குலத்தாருக்கெல்லாம் சிறந்த பட்டமும் கிடைக்க வேண்டுமென்னும் அபிப்பிராயமுமேயாகும். அவர்கள் அஞ்சிப் பின்வாங்காமல் தலைகொடுத்தது சுத்த வீரத்தன்மையே.

புலவர் பெருமான் பிரபந்தம் பாடி அவர்களை உயிர்ப்பித்ததை மாத்திரம் அறியாதவர்கள் ஏதோ ஜாலவித்தையாக இருக்கிறதென்பார்கள். சிலர் மந்திர பலத்தால் இப்படி முடிந்தது என்பார்கள். புத்திமான்களுள் சிலர் தலையும் உடலும், அறுபட்ட அறுவாயும், ஒட்டின ஒட்டுவாயும், எள்ளளவும் தெரியாமல் தழும்பும் தோன்றாமலிருப்பதனால் விசல்லியகரணி, சந்தானகரணி, சமானகரணி, சஞ்சீவகரணி என்னும் பரமௌஷங்கள் நான்கும் இவரிடத்திலிருக்க வேண்டும்; அவற்றில் சந்தானகரணியைக் கொண்டு அந்த உறுப்புக்களை இணக்கி, விசல்லியகரணியைக் கொண்டு காயத்தை ஆற்றி, சமானகரணியைக் கொண்டு தழும்பு நீக்கி, சஞ்சீவகரணியைக் கொண்டு உயிர் கொடுத்தார் என்பார்கள்.

அப்படியெல்லாம் கூறுவது தவறு. வாணி கடாட்சத்தினாலும் வித்துவ சிரேஷ்டராகிய கூத்தரின் வாக்கு விசேஷத்தினாலும், செங்குந்தருடைய வீரதர்மத்தினாலும் சத்தியத்தினாலுமே இவ்வாறு நிகழ்ந்தன. ஆதலால், இது அற்புதம் என்று மந்திரி பிரதானிமார் நாமகளை வாழ்த்தி ஒட்டக்கூத்தரைத் துதித்துச் செங்குந்தரைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். அது கேட்டுச் சோழ மன்னன் "நீர் தலை கொடுக்கச் சொன்னீரே, அதனால் உமக்கு என்ன பிரயோசனம்?" என்று கூத்தரை முன்பு நாம் கேட்டதற்கு இன்னும் சற்று நேரத்தில் தெரியவருமென்று சொன்னது, மந்திரமாகச் சொன்னபடி தமக்கு ஒட்டக்கூத்தர் என்ற பெயரும், தமது குலத்தாருக்கெல்லாம் சிரச்சிங்காசனாதிபதிகளென்ற பட்டமும் கிடைக்க வேண்டுமென்னும் எண்ணத்தில்தான் என்று உணர்ந்து கொண்டார்.

அதன்படியே, அவருக்குக் கூத்தாரென்ற பெயரை ஒட்டக்கூத்தரென்று ஸ்தாபித்து, அவரை உள்ளிட்ட செங்குந்தர்கள் யாவருக்கும் சிரச்சிங்காசனாதிபதிளென்னும் பட்டமும் கொடுத்து பலவகை விருதுகளும் வரிசைகளும் வழங்கி அதிக மரியாதைகள் செய்து கௌரவித்தார்கள்.

## ஏன்? எப்படி?

★★ உடம்பில் அதிகமாகக் கொலஸ்ற்ரோல் இருப்பவர்கள் கொழுப்பு வகை உணவுகள் உட்கொள்வதைத் தவிர்த்தாலும் அவர்களுக்கு எதிர்பார்க்கும் அளவிற்கு கொலஸ்ற்ரோல் குறைவதில்லை. அது ஏன்?

உடம்பினுள் உள்ள சில பகுதிகள் இயற்கையாகவே கொழுப்புப் படிவுகளைச் சுரக்கும் தன்மையைக் கொண்டவை. எனவே, கொழுப்பு வகை உணவுகள் உட்கொள்வதைத் தவிர்த்தாலும், இவ்வாறு இயற்கையாகவே 'கொலஸ்ற்ரோல்' சுரக்கும் தன்மை நடைபெறவே செய்யும். அதுமட்டுமன்றிச் சீனி போன்றவையும் உட்கொள்ளும் போது அவை கொழுப்பாக மாறிப் படிந்து, பின்னர் இவை கொலஸ்ற்ரோலாக மாறுகின்றன. எனவேதான், கொழுப்புள்ள உணவுகள் உண்பதைத் தவிர்த்தாலும் உடம்பில் கொலஸ்ற்ரோல் சுரக்கின்றது.



★★ இரத்தப் பரிசோதனைக்கென இரத்தம் எடுக்கையில், முழங்கையின் சற்றே மேற்புறமாகப் பட்டியொன்றினால் இறுக்கமாகக் கட்டப்படுவதுண்டு. ஏன் அவ்வாறு கட்டப்படுகின்றது?

பொதுவாக உடம்பில் இரத்தமானது, குருதிச் சுற்றோட்டத்தின்படி இருதயத்தை நோக்கியே கடத்தப்படுகின்றது. எனவே, இவ்வாறு இருதயத்தை நோக்கிச் செல்லும் இரத்தமானது முழங்கையின் உள்புறமாக இருதயத்தை நோக்கிச் செல்லும்போது அதற்குச் சற்று உயரமான பகுதியில் பட்டியொன்றினால் கட்டப்பட்டுக் கையில் இரத்தமானது அவ்விடத்தை விட்டு நகரமுடியாமல் அங்கேயே தேங்கிவிடும். இச்சந்தர்ப்பத்தில் அந்த இடத்தில் ஊசியைச் செலுத்தி இரத்தத்தைத் தேவையான அளவிற்கு எடுக்கக் கூடியதாக இருக்கும். இதற்காகத்தான் பட்டியைக் கட்டிக் கூடிய இரத்தம் எடுக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜய்யின் மூன்றாவது ஆண்டில் உங்களுக்குப் பல புதிய பரிசுகள்

காலம், நேரம் மிக வேகமாகக் கடந்து போய்க் கொண்டிருக்கின்றதென்பதை நாம் மிக அரிதாகவே உணர்கின்றோம். உங்கள் விஜய்யின் முதல் இதழ் வெளிவந்த நாள் நேற்றுப் போல் இருக்கிறது! ஆனால், அவனுக்கு இரண்டு வயது பூர்த்தியாகி மார்ச் 15 ஆம் திகதியுடன் மூன்றாவது வயது ஆரம்பிக்கின்றது என்று கூறினால் நம்புவீர்களா? ஆம்! அவனுக்கு உங்கள் வாழ்த்தும், ஆசீர்வாதமும், அரவணைப்பும், ஆதரவும், அன்பும் எப்போதும் இருக்கும் என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கை.

அவனை வாயார வாழ்த்துங்கள்.

உங்கள் வாழ்த்துச் சத்தம் இங்கே எங்கள் காதுகளுக்குக் கேட்க வேண்டும்.

இந்த இரண்டு வருடங்களில் ஆயிரம், ஆயிரம், ஆயிரம் எனப் பன் மடங்கு வாசகர்கள் விஜய்யை அரவணைத்துக் கொண்டார்கள். இனி எந்தக் கொம்பன் வந்தாலும் விஜய்யை அசைக்க முடியாது என்ற அளவுக்கு அவனுடைய ஆணிவேர் வரலாற்றில் மிக ஆழமாகச் சென்றுவிட்டது. வாசகர்களாகிய உங்களுக்கு எமது இதயபூர்வமான நன்றிகள். எல்லாம் உங்களால் தான் சாத்தியமானது.

இவ்வருடம் ஜனவரியில் இருந்து விஜய்யை வாராந்தம் வெளியிடத் தீர்மானித்தபோது ஒரு 'சின்னப் பயம்' ஏற்பட்டது. உங்களில் எத்தனை பேர், முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டு முகஞ் சுழித்து விடுவீர்களோ என்று. ஆனால் வந்து குவிந்த கடிதங்களும், விற்பனையில் ஏற்பட்ட அதிகரிப்பும் இதனைத்தான் நீங்கள் இத்தனை நாள் எதிர்பார்த்திருந்தீர்கள் என்பதைத் தெட்டத் தெளிவாக்கிவிட்டன. எங்கள் நெஞ்சப் பூரிப்பு கொஞ்ச நஞ்சமன்று. மீண்டும் நன்றி.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
இல:08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02
தொலைபேசி: 2314714, பெக்ஸ்: 2314968

விஜய்யின் இந்த இரண்டாவது வருடப் பூர்த்தியின் போது அவனுக்கு ஒரு சகோதரன் பிறந்திருக்கின்றான் என்பதை அறிவித்திருந்தோம் கவனித்தீர்களா? ஆம் விஜய்யின் சகோதரப் பத்திரிகையாகத் ''தமிழ் பி.சி டைம்ஸ்'' என்ற கணினித் தகவல் தொழில்நுட்பப் பத்திரிகை இப்போது மாதம் ஒரு முறை வெளிவர ஆரம்பித்திருக்கிறது. இதற்கான அறிவித்தலை விஜய் தாங்கி வந்திருக்கிறான். இவனை விஜய்யின் சகல முகவர்களிடமும் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் ஆதரவுக் கரங்களை அகல விரித்து அவனையும் உங்கள் தோளில் தூக்கி வைத்துக் கொள்ளுங்கள். அவன் வேறு யாருமல்ல. விஜய்யின் தம்பியல்லவா? எங்கே? உங்கள் கரங்களை நீட்டுங்கள். அதற்கும் ஓர் ஆயிரம் நன்றிகள்.

இந்த மூன்றாவது ஆண்டில் விஜய் உங்களுக்கு வேறு என்னவெல்லாம் புதிதாகத் தரப் போகிறான். விஜய்யை உன்னிப்பாகக் கவனித்து வாருங்கள். நிறைய அறிவித்தல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

வாசகர் அறிவுப் போட்டி வெகுவாகச் சூடு பிடித்திருக்கிறது. உங்களுக்குப் பெறுமதி மிக்க பரிசுகள் காத்திருக்கின்றன. இளம் செய்தியாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். உங்கள் பாடசாலைகளில் எல்லாம் விரைவில் ஊடகச் சங்கங்கள் இயங்கப் போகின்றன. உங்கள் அனைவரையும் விரைவில் எம்முடன் நேரடியாகச் சம்பந்தப்படுத்திக் கொள்ளத் தீர்மானித்திருக்கின்றோம். இப்படி, இப்படி, இப்படி இன்னும் பல அம்சங்கள் காத்திருக்கின்றன. சந்தோஷம் தானே. மீண்டும் சந்திப்போம்.

## க.பொ.த (உ/த) பரீட்சை மே 22 இல் ஆரம்பம்



இவ்வருடத்திற்கான க.பொ.த (உ/த) பரீட்சை எதிர்வரும் மே மாதம் 22 ஆம் திகதி ஆரம்பித்து ஜூன் மாதம் 17 ஆம் திகதி நிறைவடையும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் கல்வியமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முன்பு கலந்துரையாடப்பட்ட போது ஆகஸ்ட் மாதத்தில் நடத்தும் படி சிலரும், ஏற்கனவே திட்டமிட்டபடி நடத்தும்படி சிலரும் கோரிக்கை விடுத்ததாகத் தெரிவித்த ஆணையாளர், மே 22 ஆம் திகதியிலிருந்தே பரீட்சையை நடத்துவதெனத் திட்டமிடப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதனால் பாடசாலை தவணை விடுமுறைகளிலும் மாற்றம் ஏற்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். கல்வியமைச்சின் செயலாளர் ஆரியரட்ன ஹேவகே இது குறித்துக் கருத்து தெரிவிக்கையில், இலங்கையிலுள்ள 600 பாடசாலைகள், பரீட்சைக்காகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும், ஏப்ரல் மாதம் இரண்டாம் தவணைக்காகத் திறக்கப்படும் அப்பாடசாலைகள் பரீட்சைக்காக மீண்டும் மே மாதத்தில் மூடப்படும் என்றும் தெரிவித்தார்.

## ஆசிரியர்களுக்கான மொழி வகுப்புகள்

ஆசிரியர்களுக்கு மேலதிக மொழியறிவைப் பெற்றுக் கொள்ளும் வகையிலான பாட நெறியொன்றினை தேசிய கல்வி நிறுவனம் ஆரம்பித்துள்ளது. தமது தாய்மொழி தவிர்ந்த ஏனைய இரண்டு மொழிகளில் ஆசிரியர்களைத் தேர்ச்சியடையச் செய்யும் நோக்குடன் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் ஒரு வருடப் பாடநெறியாக நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாகவும், முடிவில் தேசிய தரச் சான்றிதழ் வழங்கப்படும் என்றும், தேசிய கல்வி நிறுவனத்தின் தலைவர், பேராசிரியர் ஜே.டபிள்யூ விக்ரமசிங்க அறிவித்துள்ளார்.

மேலதிக மொழி விருத்திப் பாடநெறிக்கான விரிவுரை வடக்கு, கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் 23 நகரங்களில் ஏற்படுத்தப்பட்ட தேசிய நிலையங்களில், வார இறுதி நாட்களில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம் மேலதிக மொழி விருத்திப் பாடநெறியில் கலந்து கொண்டு நன்மையடைய விரும்பும் அரசாங்க அல்லது அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலையொன்றில் கற்பிக்கும் ஆசிரியர்களை அவர்களது விண்ணப்பங்களை மகரகம தேசிய கல்வி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கும்படி நிறுவனப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## 'அம்டா' நிறுவனத்தின் இலவச வகுப்புக்கள்

கடந்தகால இயற்கை அனர்த்தம், போர் போன்ற காரணங்களினால் பாதிப்புற்று வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்ற; கல்வியில் பின் தங்கிய க.பொ.த (சா/த), (உ/த) மாணவர்களுக்கான கல்வி மேம்பாட்டுக்கு உதவும் பொருட்டு 'அம்டா' நிறுவனம் இலவச வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளது.

கல்முனை, பெரிய நீலாவணை, சேனைக் குடியிருப்பு, துறை நீலாவணை, காரைதீவு ஆகிய இடங்களிலுள்ள க.பொ.த, சாதாரண தர, உயர்தர மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், தமிழ்மொழி, ஆங்கிலம், சமூகக் கல்வி ஆகிய பாடங்களுக்கு இலவச வகுப்புக்கள் நடைபெறவுள்ளதாகக் கல்முனை 'அம்டா' நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் இவ் இலவச வகுப்புகளுக்குத் தவறாமல் சமூகமளிப்பதுடன் நிறுவனம் நடாத்துகின்ற மாதாந்தப் பரீட்சைகளிலும் ஆண்டிறுதிப் பரீட்சைகளிலும் கலந்து கொள்ளும் மாணவர்களில் விசேட திறமையைக் காட்டும் மாணவர்களுக்கு, தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும் என்றும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கும் கூட விசேட பரிசுத் திட்டங்கள் உண்டென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விஜய் வாசகர் அறிவுப் போட்டி

வாசகர்களே! இம்மாதம் 1ஆம், 8ஆம், 15ஆம், 22 ஆம், 29 ஆம் திகதி ''விஜய்'' இதழ்களை உன்னிப்பாக வாசிப்பதுடன் அவற்றை பாதுகாத்தும் வையுங்கள். இந்த இதழ்களில் உள்ள விடயங்களில் இருந்து வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றுக்குச் சரியான விடையளிக்கும் 3 அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குப் பெறுமதிமிக்க கல்குலேட்டர் (Calculater) அல்லது டி.வி கேம்ஸ் (T.V.Games) பரிசுகளாக வழங்கப்படும்.

- போட்டி ஒவ்வொரு மாதமும் நடைபெறுவதுடன் வினாக்கள் மாதத்தின் முதல் வாரத்தில் பிரசுரிக்கப்படும்.
- நான்கு மாதங்களுக்கொருமுறை மாபெரும் பரிசுக் குலுக்கல் மூலம் மேலும் மூன்று அதிர்ஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு உயர் பெறுமதியிலான பரிசுகள் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல், உள சக்தியை மேம்படுத்தும் வாழைப்பழம்



நாம் அன்றாடம் மூன்று வேளை உணவு உட்கொள்கின்றோம். எமது உணவில் ஈற்றுணவும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. பழங்கள், ஐஸ்கிறீம், புடிங் வகைகள் போன்றவற்றை ஈற்றுணவுகளாகச் சாப்பிடலாம்.

எனினும் ஐஸ்கிறீம், புடிங் வகைகள் சாப்பிடுவதை விட, பழங்கள் சாப்பிடுவதனால் விற்றமின், நார்ப்பொருள் போன்ற ஊட்டச் சத்துக்களும் எமது உடலுக்குக் கிடைக்கின்றன.

இன்று பழங்கள் மலிவாகக் கிடைப்பது அரிது எனினும், வாழைப்பழத்தை ஓரளவு மலிவாகவும் எளிதாகவும் பெற்றுக் கொள்ள முடியும். மருத்துவக் குணம் மிக்க வாழைப்பழங்களில் எமது உடலுக்குத் தேவையான நிறை ஊட்டச் சத்துக்களும் நோய் எதிர்ப்புச் சக்திகளும் அடங்கியுள்ளன. பொற்றாசியக் குறைபாட்டினால் அவதிப்படுபவர்களுக்குத் தினமும் வாழைப்பழங்கள் சாப்பிடும்படி வைத்தியர்கள் ஆலோசனை வழங்குகின்றனர். பெரிய வாழைப்பழமொன்றில் 602 மில்லிகிராம் பொற்றாசியம், 140 கலோரிப் பெறுமான சக்தி, 2 கிராம் புரதம், 4 கிராம் தாதுப்பொருள் என்பன அடங்கியுள்ளனவாம். இதனால் தான் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ள பிள்ளைகளுக்குத் தினமும் ஒரு வாழைப்பழம் சாப்பிடக் கொடுக்கும்படி வைத்தியர்கள் ஆலோசனை கூறுகின்றனர்.


வேறெந்த உணவினையும் உட்கொள்ளாமல், மூன்று வேளைகளும் வாழைப்பழங்களை மாத்திரம் உண்டே உயிர் வாழ முடியும் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்

## போசாக்கு மட்டம்

வாழைப்பழங்களில் அதிகளவில் விற்றமின்களும் கனிப்பொருட்களும் கூட இருக்கின்றன. அளவில் சற்றுப் பெரிய வாழைப்பழமொன்றில் விற்றமின் ஏ உட்படத் தயமின் 15 மில்லி கிராமும் இறைபோபிலேவின் 0.82 மில்லிகிராம், 29 மைக்ரோகிராம் போலிக் அமிலம் என்பன உள்ளன. கர்ப்பிணித் தாய்மார்களும் குழந்தைப் பாக்கியத்தை எதிர்பார்த்திருக்கும் பெண்களும் தினமும் 3 வாழைப்பழங்கள் சாப்பிடுவதால் ஒரு நாளைக்குத் தேவையான போலிக் அமிலம் அவர்களுக்குக் கிடைக்கின்றதாம்! மேலும் கர்ப்பிணிப் பெண்களின் வாந்தியைக் கட்டுப்படுத்தவும் வாழைப்பழம் உதவுகிறதாம்.

## அனீமியா

இரும்புச் சத்துக் குறைபாட்டு நோயான அனீமியா, கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் பருவ வயதை அடைந்த பிள்ளைகளுக்கும் அதிகமாக ஏற்படுகிறது. இவர்கள் தினமும் வாழைப்பழம் உட்கொண்டு வந்தால் அனீமியா நோயிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளலாம்.



## குருதி அழுத்தம்

வாழைப்பழத்தில் உள்ள பொற்றாசியமும், அளவான உப்பும் குருதி அழுத்தத்தைக் கட்டுப்படுத்துகின்றன. மேலும் உளவியல் பிரச்சினைகளால் அவதியுறுபவர்களும் வாழைப்பழம் உண்பதால் நிவாரணம் பெறுகின்றனர்.





## ஞாபக சக்தி, கிரகிக்கும் ஆற்றல்

ஒருவரின் ஞாபக சக்தியை மேம்படுத்தவும் கிரகிக்கும் ஆற்றலை விருத்தி செய்யவும் வாழைப்பழம் மிகவும் துணை புரிகின்றது. இங்கிலாந்தில் 200 இற்கும் மேற்பட்ட மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஆய்விலிருந்து இது புலனாகியுள்ளது.

## ஓய்வின்மை, வேலைப்பளு

அவுஸ்திரேலியாவில் வேலைப்பளு மற்றும் ஓய்வின்மையால் அவதிப்படுபவர்களிடையே ஆய்வொன்று நடத்தப்பட்டதாம். அங்கு வந்திருந்தவர்களுக்கு ஒவ்வொரு வாழைப்பழம் உண்ணைக் கொடுக்கப்பட்டது. அவர்கள் உண்ட நேரத்தின் பின்னர் அவர்கள் முன்னரை விட உற்சாகமாக இருப்பதை அவதானிக்க முடிந்ததாம். கவலையுடன் இருந்தவர்களின் முகங்களில் கூட ஓரளவு மலர்ச்சியைக் காணக் கூடியதாகவும் இருந்ததாம்.

## புகைபிடித்தல்

புகைபிடித்தலுக்கு அடிமைப்பட்டுள்ளவர்களை அதிலிருந்து மீட்டெடுப்பதற்கும் வாழைப்பழம் துணைபுரிகின்றது. இதில் உள்ள விற்றமின் A, C, B6, B12 போன்றவற்றின் செயற்பாட்டினால் புகைப் பிடிப்பவர்களுக்குத் தாம் எதிர்பார்க்கின்ற நிம்மதியும், சந்தோஷமும் கிடைக்கின்றனவாம். எனவே நாளடைவில் அவர்கள் புகைபிடிப்பதைக் கைவிடுவர். இதை நீண்டகாலத்திற்குத் தொடர்ந்து செயற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் அதன் முழுமையான அனுகூலத்தைப் பெறக்கூடியதாய் இருக்கும். அத்துடன் வாழை யிலுள்ள மெக்னீசியம், பொற்றாசியம் என்பவற்றின் செயற்பாட்டினால் உடலிலுள்ள நிக்கொட்டினின் அளவும் குறைந்து விடும்.

## மாரடைப்பு

தினமும் வாழைப்பழம் உட்கொள்வதனால் மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு 40% ஆல் குறைவடையச் சாத்தியம் இருப்பதாக இங்கிலாந்தில் நடத்தப்பட்ட ஆய்வொன்றிலிருந்து தெரியவந்துள்ளது.

## மூலவியாதி (Haemorrhoid)

மூலவியாதியால் அவதிப்படுகிறவர்கள் தினமும் வாழைப்பழம் சாப்பிட்டு வந்தால் அதன் தாக்கத்திலிருந்து ஓரளவுக்கேனும் தம்மைக் காத்துக் கொள்ளலாம். குதத்தில் ஏற்படக் கூடிய பல்வேறுபட்ட நோய்களுக்குமான எதிர்ப்புச் சக்தி இதில் அடங்கியுள்ளது. வாழைப்பழத்திலுள்ள 2.6% தாதுப்பொருட்களினால் இந்நிலை கட்டுப்படுத்தப்படுகின்றது.

சாம்பல் வாழை, பழமாகவும் சமைத்தும் சாப்பிட உகந்தது. இதிலும் மேற்கூறப்பட்ட நோய்களை எதிர்க்கக் கூடிய சக்தி இருக்கின்றது. எனவே தினமும் உணவு உட்கொண்ட பின் வாழைப்பழமொன்று சாப்பிடுவதை வழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். இது உங்கள் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழிவகுக்கும்.

- நுஸ்பா கௌஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 2005 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நாஸாவினால் அனுப்பப்பட்ட டிஸ்கவரி ஓடத்திலும் வெடிப்புக்கள் ஏற்பட்டதாக நாஸாவின் இணையத் தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மூன்று வருடங்களுக்கு முன்னர் 7 பேருடன் சிதறிய கொலம்பியா விண்வெளி ஓடத்திலிருந்து நுரை ரப்பர் வெளித் தள்ளப்பட்டதைப் போலவே 2005 ஜூலையில் அனுப்பப்பட்ட டிஸ்கவரி ஓடத்திலும் நிகழ்ந்திருக்கிறது என்பதை நாஸா தற்போது தான் தெரிவித்துள்ளது.

# 2005 இல் சென்ற டிஸ்கவரியிலும் வெடிப்பு!



டிஸ்கவரியிலிருந்து 16 நுரை ரப்பர்கள் வெளிப்பட்டன. இது ஓடத்தை வடிவமைத்துத் தயாரித்த பொறியியலாளர்களிடையே மிகுந்த கலக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

கொலம்பியாவுக்கு நேரிட்ட கதி பிற கலங்களுக்கும் ஏற்பட்டு விடக்கூடாது என்ற இலக்குடன், மற்றைய ஓடங்களில் இக்குறைபாட்டினை நீக்குவதற்குத் தனிக் கவனம் செலுத்தபட்டது. அவ்வாறிருந்தும் கூட இத்தனை நுரை ரப்பர் துண்டுகள் வெளிப்பட்டிருப்பது குறித்து நாஸா கவலையடைந்தது.

ஆனாலும் கூட, டிஸ்கவரி விண்வெளி ஓடத்தினை விண்ணில் வைத்தே சோதிக்க விண்வெளி வீரர்கள் அது நல்ல நிலையில் இருப்பதாகவே தெரிவித்தனர். அதில் இருந்தவர்கள் பத்திரமாகப் பூமிக்குத் திரும்பியிருந்தனர். எதிர்வரும் மே மாதத்தில் இன்னோர் விண்வெளி ஓடத்தைச் செலுத்துவதற்குத் தயாராகி வருகிறது நாஸா.

# சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு ஆட்சேர்ப்பு!



'செல்லர்ஸ்', 'மைக்கல் ஃபோஸ்ஸம்' ஆகிய இரண்டு விஞ்ஞானிகளும் சர்வதேச விண்வெளி நிலைய நிர்வாகச் செயற்பாடுகளில் அதிகமாக ஈடுபட்டுள்ளார்கள். அடிக்கடி விண்வெளி சென்று வருகின்ற இவர்கள் விண்வெளி நிலையத்துடன் மேலும் சில ஸ்தாபனங்களையும் நிறுவுவது பற்றித் திட்டமிட்டுள்ளனர்.

விண்வெளி வீரர்கள் தங்குவதற்கும், போக்குவரத்துக்குமான வசதி, ஒன்று கூடலிடம், விபத்துக்கள் ஏதாவது ஏற்பட்டால் சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கான சுகாதார நிலையம், ஓடங்களையும், நிலையத்தொழில்நுட்ப உபகரணங்களையும் பழுது பார்க்கக் கூடிய வசதி போன்ற பல்வேறு தேவைகளும் குறித்துச் சிந்தித்து வருகின்ற விஞ்ஞானிகள், இவ்விடங்களில் பணியாற்ற வேண்டியவர்களையும் நியமிப்பதற்குரிய ஆலோசனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மிக விரைவில் மேற்படி பதவிகள் குறிப்பிடப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்படலாம். தயாராக இருங்கள் விண்வெளிக்குச் செல்வதற்கு!

## விண்வெளித் தகவல்கள்

லதா

# புதிய திட்டம்

ஐந்து சர்வதேசப் பங்காளி நாடுகள் இணைந்து உருவாக்கி வருகின்ற சர்வதேச விண்வெளி நிலையம்

2010 ஆம் ஆண்டு பூர்த்தியடையும் என்று முன்னைய நிகழ்ச்சித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அது முடிவுறும் போது நாஸா தனுடைய விண்வெளி நிலையச் செயற்பாடுகள் யாவற்றையும் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு நகர்த்துவதுடன், விண்ணோடங்களின் தரிப்பிட நிலையமும் கூட நாஸாவில் இருக்காது என்று, நாஸாவின் தற்போதைய நிர்வாகி தெரிவித்துள்ளார். இப்புதிய திட்டம் பற்றி முன்பு குறிப்பிடவில்லை.

அரைவாசியே பூர்த்தியாகியுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்திற்குத் தற் ஓடங்கள் அன்பளிப் னவாம். இது குறித்து துள்ள சர்வதேச விண் அமைப்புக் குழு

போது வரையில் 16 பாகக் கிடைத்துள்ள மகிழ்ச்சி தெரிவித் வெளி நிலைய வினர் இன்னும் பல



சர்வதேச ஓடங்கள் கிடைக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். கனேடிய விண்வெளி நிலையம், ஜப்பான் விண்வெளி நிலையம், ஐரோப்பிய விண்வெளி நிலையம், ரஷ்ய விண்வெளி நிலையம், அமெரிக்காவின் நாஸா ஆகிய ஐந்து நாடுகளுமே சர்வதேச விண்வெளி நிலைய உருவாக்கத்தில் ஈடுபட்டு வருகின்றன.



# இன்னொரு பால்வெளி!

நாஸாவும், ஈஸாவும் புதிய பால்வெளியொன்றினைக் கண்டு பிடித்து அறிவித்துள்ளன. வளிமண்டலத்தில் இவ்விரு நிறுவனங்களும் தொடர்ந்து மெற்கொண்டு வருகின்ற ஆய்வின் பெறுபேறுகளாக அவ்வப்போது பல ஆச்சரியங்களைக் கண்டு தெரிவித்த வண்ணமே உள்ளன.

அதன்படி, கடந்த வாரம் வளிமண்டலத்தில் மிகப் பிரமாண்டமானதோர் பால் வெளி மண்டலத்தைக் கண்டுபிடித்துள்ளன.

மிகவும் நுண்ணியதோர் நுணுக்குக் காட்டியினூடாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இப்பால் வெளியினை, கமரா தொடர்ந்து 22 நிமிடங்கள் வரை படம் பிடித்திருக்கிறது.


'மெஸ்ஸியர் - 101' என்று பெயர் சூட்டப்பட்டு இது தொடர்பாக மேலதிக ஆய்வுகளைத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றன நாஸாவும், ஈஸாவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நம் நாட்டுச் செல்வம் சீகி



'சீகிரியா' நம் நாட்டு மக்கள் யாவரும் அறிந்த ஓர் இடமாகும். 'சீகிரியா' என்ற பெயரைக் கேட்டவுடனேயே நம் ஞாபகத்தில் வருவது 'சீகிரியா' காசியப்பன் அரசனே.

காசியப்பன் கி.பி 477-495 க்கு இடைப்பட்ட காலத்திலேயே ஆட்சி செய்தான். காசியப்ப மன்னனின் தந்தை தாதுசேனன். அவன் கலாவாவியைக் கட்டுவித்தான். காசியப்பன் தன் தந்தையைக் கொன்றதாக வரலாற்று நூல்களில் தெளிவாகக் கூறப்படுகின்றது. காசியப்பன் தாதுசேனனின் பட்டத்து ராணி மகன் அல்ல என்பது வரலாற்று நூல்கள் கூறும் தகவலாகும்.


சீகிரியாவைப் பற்றி நாம் கொண்டிருக்கும் அறிவை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். அதில் முதலாம் பகுதி காசியப்பன் சீகிரியாக் குன்றைத் தனது வாழ்விடமாக ஆக்குவதற்கு முன்னைய வரலாறு ஆகும்.

2வது பகுதியாக, நாம் கருதக்கூடியது, காசியப்பன் சீகிரியாவை வந்தடைந்து, அங்கு தமது நடவடிக்கைகளை மேற்கொண்ட காலத்துக்குரிய வரலாற்றுக் கதை ஆகும். காசியப்பன் சீகிரியாவைத் தனது இராஜ்ய பரிபாலன தலைநகராக்கி ஆட்சி செய்தது அண்ணளவாக 18 வருடங்கள் வரையிலான காலகட்டமேயாகும். அதன்பின் 'சீகிரியா' விற்கு என்ன நடந்ததென்பது பற்றிய விபரங்கள் 3வது பகுதியையே சாரும். இம் மூன்று பகுதிகளைப் பற்றியதான பொதுவான அறிவைப் பெற்றுக் கொள்வதன் மூலமே சீகிரியாவைப் பற்றிப் பூரணமாகத் தெரிந்து கொள்ள முடியும். நாம் இப்போது இந்த மூன்று பகுதிகளைப் பற்றிக் கொண்டிருக்கும் அறிவு எந்த அளவு என எடை போட்டுக் கொள்வோம்.

## சீகிரியாவின் பூர்வீகக் குடிகள்

'சீகிரியா' எனும் பதப்பிரயோகம் முதன் முதலில் கி.பி 5ம் நூற்றாண்டிலேயே ஏற்பட்டது. அது காசியப்பன் அங்கு தமது கட்டிடங்களை நிர்மாணித்த யுகமாகும். காசியப்பன் அங்கு வருகை தருமுன்னரே அந்தக் குன்றைப் பற்றி மக்கள் அறிந்திருந்தனர் என்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு.

உண்மையாகவே கி.பி 5ம் நூற்றாண்டுக்கு முன்னைய பல்லாயிரம் ஆண்டு பழைமை வாய்ந்த சான்றுகளை அங்கு நம்மால் காணமுடிந்தது. காசியப்பன் சீகிரியாவைத் தனது இராச்சியப் பரிபாலன மத்திய ஸ்தலமாகப் பயன்படுத்துவதற்கு முன்னைய காலத்துக்கு உரித்தான வரலாறு அதுவாகும்.





இதைப் பிரதானமாக 3 தலைப்புகளின் கீழ் நம்மால் கலந்துரையாட முடியும். அதில் முதலாவது தலைப்பு மிகப் பண்டைய காலகட்டத்தில் சீகிரியாவிலும் அதன் அண்மையில் உள்ள கற்குகைகளிலும் கற்காலத்தில் மக்கள் வாழ்ந்த வரலாற்றைப் பற்றியது.

சீகிரியாக் குன்றின் கிழக்குத் திசையில் காணப்படும் கற்குகை அகழ்வாராய்ச்சியாளர்களால் பரிசோதனைக்குட் படுத்தப்பட்டது. அக்கற்குகையை அப்பிரதேச மக்கள் 'அலிகல' குகை என்றே அழைத்தனர்.

இக்குகையின் அடியில் உள்ள மண்ணை ஆராய்ந்ததில் அகழ்வாராய்ச்சியாளர்களுக்கு மிகப் பழங்காலத்தில் அங்கு வாழ்ந்த மக்களைப் பற்றிய சான்றுகள் கிடைத்துள்ளன. விஞ்ஞான முறைப்படி அதை ஆராய்ந்து பார்த்ததில் ஆகக் குறைந்தது 12,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் அம்மக்கள் இக்கற்குகையில் வாழ்ந்திருக்கிறார்கள், எனத் தெரிய வந்துள்ளது.

'அலிகல' கற்குகையில் மட்டுமல்லச் சீகிரியாவிற்கு அண்மையில் உள்ள பிதுரங்கலக் குன்றின் மேற்பரப்பில் அமைந்துள்ள கற்குகையைத் தோண்டிப் பார்த்ததில் அவற்றிலும் கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. அக்காலத்தில் வாழ்ந்த மனிதரொருவருடைய எலும்புக்கூடு சீகிரியாக் குன்று தெரியக் கூடிய அளவு தூரத்தில் அமைந்துள்ள 'பொதான' எனும் இடத்தில் உள்ள ஒரு கற்குகையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலும் பல தகவல்களை எதிர்காலத்தில் கண்டறிவார்கள் என்பது நிச்சயமே. கடந்த 1200 வருடங்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இக்கற்காலத்துக்கு உரித்தான மனிதர்கள் சீகிரியா மற்றும் அதன் அயலில் வாழ்ந்தார்கள் என நமக்கு இப்பொழுது உறுதியாகத் தெரியவருகிறது.

## சில மயான பூமிகள்

மேற்குறிப்பிட்டவாறு சீகிரியாவில் வாழ்ந்த கற்கால மக்களது வாழ்க்கை முறை, குறிப்பிடத்தக்கதொரு மாற்றத்துக்குட்பட்ட, இப்போதைக்கு அண்ணளவாக 3000 வருடங்களுக்கு முன்னைய காலத்திலேயே ஆகும். விவசாய நடவடிக்கைகளில் ஈ[illegible]வதற்கான அறிவு வளர்ச்சி பெற்ற மக்கள் இப்[illegible]தேசத்திற்கு வருகை தந்த சம்பவம் குறைந்தது. 2900 வருடங்களுக்கு முன்னர் நடந்தது என்பதற்கான ஆதாரங்களைச் சீகிரியாவைச் சூழ உள்ள பகுதிகளில் பார்க்கலாம்.

இவற்றுள் முக்கியத்துவம் வாய்ந்தது அம்மக்களால் பயன்படுத்தப்பட்ட சில மயான பூமிகளாகும். சீகிரியாவிற்கு அண்மையில் அமைந்துள்ள நலுகுல, திகம்பதன போன்ற இடங்களில் இப்படிப்பட்ட மயான பூமிகள் அகழ்வாரய்ச்சியாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அம்மயான பூமிகளை உபயோகித்தவர்களே சீகிரியா மற்றும் அதன் அயற்சூழலில் முதலில் கிராமங்களை உருவாக்கியவர்கள் ஆவர். இம் மக்களது காலத்திலேயே முதன்முதலாக இரும்பு உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டன என்பது ஒரு விசேடமான அம்சமாகும்.

இரும்பு உபகரணங்களை உபயோகித்து அவர்கள் காடுகளை வெட்டி உருவாக்கப்பட்ட வெளிகளைச் சேனைப்பயிர் செய்கைக்காகப் பயன்படுத்தி இருப்பார்கள் என அகழ்வாராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர். சீகிரியா மற்றும் அதன் அயற்சூழல் தொடர்பாக மற்றொரு யுகம் ஆரம்பமாவது பௌத்த கலாசாரம் வளர்ச்சியடைந்ததைத் தொடர்ந்தே ஆகும். இது கி.மு 250 இல் நடந்திருக்கலாம். சீகிரியக் குன்றின் பாதம் அமைந்துள்ள அடிவாரத்தின் கற்குகை வாயில் பகுதியில் செதுக்கப்பட்டுள்ள புராதன பிராமிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளதன்படி அக்காலத்தில் இருந்த முனிவர்களால் அந்தக் கற்குகை சுத்தப்படுத்தப்பட்டுப் பௌத்த பிக்குகளிடம் கையளிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இக்காலத்தில் சீகிரியாக் குன்று ஜாதபப்பத என்றழைக்கப்பட்டது என பண்டைய கால மக்களால் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. எப்படியாயினும் பூமியிலிருந்து எழுந்து நிற்கும் இராட்சத மனிதரொருவரைப் போலக் காணப்படும் இக்குன்றைப் பற்றி அக்காலத்தில் அப்பிரதேசங்களில் வசித்த மக்கள் அறிந்திருக்கவில்லை, என நினைக்க இயலாது. பௌத்த பிக்குகள் சீகிரியா மற்றும் அயற்சூழலில் அமைந்திருந்த கற்குகைகளைத் தம் வாசஸ்தலமாக உபயோகித்த காலத்தில் அதனைச் சூழப் பல கிராமங்கள் இருந்தன என இன்று அகழ்வாராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவர்கள் சிறிய வாவிகளுக்கு அண்மையில் வாழ்ந்து சிறிய அளவிலான விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.


## முக்கிய கால கட்டங்கள்

சீகிரியாவின் மிக முக்கிய காலம் கி.பி 477-495க்கு இடைப்பட்ட காலமாகும். காசியப்ப அரசனால் அங்கு தன் நிர்வாக மத்தியஸ்தலத்திற்கு உரிய நிர்மாணப் பணிகளைச் செய்த பின்னரே தொடங்குகின்றது. அப்பணிகள் எவ்வளவு சிறப்பான பணி. சீகிரியாக்குன்று அதனைச் சூழவுள்ள நிலமட்டத்திலிருந்து உயரமானது. அக்குன்றின் மேற்பரப்பில் கட்டப்பட்டிருக்கும் மாளிகை கி.பி 5ம் நூற்றாண்டிற்கு உரித்தானது. குன்றின் மேற்பரப்பில் கட்டப்பட்டுள்ள குளம், மாளிகை உட்படப் பல நிர்மாணங்கள் அண்ணளவாக மூன்று ஹெக்ரயர் அளவிலான பிரதேசம் முழுவதும் காணப்படுகின்றது. சீகிரியாக் குன்றின் கீழ்ப்பரப்பில் பூஞ்சோலை அமைந்துள்ளது. இப்பூஞ்சேலைக்கு உரித்தான முழு நிலப்பரப்பு அண்ணளவாக 130 ஹெக்ரயர் ஆகும்.

பொதுவாகச் சீகிரியாவைப் பார்வையிடச் செல்லும் உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் சீகிரியாவிற்குள் நுழையும் மேற்கு திசையில் அமைந்துள்ள வாயிலின் மேற்குப் பக்கப் பூஞ்சோலைக்கு உரித்தான நிலப்பரப்பு 90 ஹெக்ரயர் ஆகும். (அதாவது 225 ஏக்கர்கள்) சீகிரியாக் குன்றின் கிழக்குப் பகுதியில் இன்னொரு நுழைவாயில் உள்ளது. அப்பகுதி இன்னும் அகழ்வுக்குட்படுத்தப்படவில்லை. அப்பகுதியில் உள்ள நிர்மாணங்களைக் கொண்ட பூஞ்சோலை 40 ஹெக்ரயர் (100 ஏக்கர்) ஆகும். சீகிரியாச் சோலையைச் சுற்றி இரு பிரகாரங்கள் உண்டு. அவற்றில் ஒன்று உட்பிரகாரம் எனவும், மற்றையது







வெளிப்பிரகாரம் எனவும் பெயரிடப்பட்டுள்ளன. இப்பிரகாரங்களின் தூரம் அண்ணளவாக 10 கிலோ மீற்றர் இருக்கும். இப்பிரகாரங்களுக்கிடைப்பட்ட அகழி ஏறக்குறைய 8 கிலோமீற்றர் வரை நீளமானது.

## நன்கு பாதுகாக்கப்பட்ட பழஞ்சோலை


இவ்வாறான விசாலமான நிர்மாணம் ஒன்று எமக்கு எவ்வாறு உரிமையானது என்பது கவனஞ் செலுத்தத்தக்கது. உலகின் பழைய பூங்காக்களில் பழைமைத் தன்மை மாறாத நிலையில் இன்றும் எஞ்சியிருக்கும் ஒரு பூங்காவாக இது விளங்குவதே இதற்கு முக்கியத்துவத்தை ஏற்படுத்துகின்றது. தெற்காசியாவிலேயே நன்கு பாதுகாக்கப்பட்ட ஒரு சோலை இது என்பது புதை பொருளாய்வாளர்களின் கருத்தாகும்.

இப்பூங்கா எமக்குப் பல விடயங்களைத் தெரியப்படுத்துகின்றது. அது நீர்த் தொழில் நுட்பமாகும். இப்போதும் மழைக்காலத்தின் பின்னர், தடாகத்தில் நீரூற்றுப் பூந்தாரையாகப் பொங்குகின்றது.

கட்டிட நிர்மாணத் துறையினரும், பொறியியலாளரும் முற்காலத்தில் சிறப்பான முறையில் இதனை நிர்மாணித்ததாலேயே உலர்வலயப் பிரதேசத்தில், இத்தகைய நீர் வித்தையைச் செயற்படுத்தக் கூடியதாக இருக்கிறது.

இப்பூங்காவின் இன்னோர் சிறப்பம்சம் அதன் இயற்கை அழகு எச்சந்தர்ப்பத்திலும் பாதிக்கப்படாத விதத்திலேயே அதன் சகல நிர்மாணங்களும் அமைந்திருப்பதாகும். இயற்கையின் சுபாவம் மாற்றப்படாதிருத்தலே இங்கு யாவற்றிலும் பின்னணியாகச் செயற்படும் எண்ணக்கருவாகும். சீகிரியாவில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் இலங்கையின் புராதன ஓவியக் கலை சம்பந்தமான





மனம் கவர் உதாரணமாகும். அந்த ஓவியம் பற்றிப் பல்வேறு கருத்துக்களை அறிஞர்கள் கூறியுள்ளனர். அதைப் பற்றிய பல்வேறு தகவல்கள் இப்பொழுதே பல புத்தகங்களில் வெளிவந்துள்ளன.

சீகிரியா 1200 வருடங்களுக்கு முன்னைய எமது நாட்டின் மொழி மற்றும் அழகியற்கலை, இரசனை என்பன எப்படிப்பட்டவை என்பதைத் தெட்டத் தெளிவாக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அதிசயங்களில் இயற்கையின் விநோதம்!

**அறிவியற் கலசம்**

பருக்கை : 51

அன்புச் செல்வங்களே,

உலகிற் பல அதிசயங்கள் உள்ளன. அவற்றுள் சில இயற்கையாகவும் செயற்கையாகவும் காணப் பெறுகின்றன. இங்கு இயற்கையாகவும் உள்ள சரவக் குகைக் குழியறைகள் பற்றி அறிவியல் நோக்கில் பார்ப்போம். இவை மிகவும் விநோதமாகவும், அதிசயமாகவும் கருதப் பெறுகின்றன. சுற்றுலாத் தலங்களில் முதல் தரமான இயற்கைத் தலமாக கணிக்கப் பெறுகிறது. வாசியுங்கள். வாசித்தவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

நன்றி.

உலகில் இயற்கை அதிசயம், செயற்கை அதிசயம் என உண்டு. செயற்கை அதிசயங்கள் மனிதரால் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப் பெற்றிருக்கின்றன. அவற்றுள், ஏழு அதிசயங்கள் முக்கியமானவை. இந்தியாவில் (அக்ரா) தாஜ்மகால், இத்தாலியில் தொங்கு தோட்டம் போன்றவற்றை எடுத்துக் காட்டுக்கு இங்கு கூறலாம். இவை செயற்கையாக உருவாக்கப் பெற்றன.

இவை தவிர, இயற்கையாக உருவாகிய பல அமைப்புகள் அதிசயக் கோலங்கள் உலகில் பல பாகங்களில் கண்டு பிடிக்கப் பெற்றும், இன்னுங் கண்டு பிடிக்கப் பெறாமலும் இருக்கின்றனவே!

இவ்வியற்கை அதிசயங்களில், அண்மையில் கண்டு பிடிக்கப் பெற்ற தென்னாசியாவின் போர்னியோ தீவின் 'சரவக்' குகைக் குழியறைகளும் ஒன்றாகும். இவ்வதிசயக் குழியறைகள் 1980ம் ஆண்டளவில் கண்டு பிடிக்கப் பெற்று, உலக வெளிச்சத்துக்குத் தெரியப் பெற்றிருக்கின்றன.

இங்கு காணப்பெறும் குகைக்குழிகள் மிகவும் விநோதமானவை. இவை, ஒரு பெரும் சுண்ணப் பாறைப் பின்னல் அமைப்பில், தொடர் பாறைத் தொடராகக் கணிக்கப் பெறுகின்றன. இவை சரவக் சேம்பர்ஸ் (Saravak Chambers) என அதிசயக் குழியறைகள் எனவும் கருதப் பெறுகின்றன.

இப்பாறைக் குகைக் குழியறைகள் போர்னியோவின் பிரபலமான 'குனூங் அபி' (Gunung Api Mount) எனும் மலை அடிவாரத்திற் காணப்படுகின்றன. இக்குழிக் குகைகள் ஏறத்தாழ 23 கால்பந்து மைதான அளவு விஸ்தீரணங் கொண்டு இருக்கின்றனவாம். இவ்விதமான நிலவறைக் கிணறு போன்ற (எமது நாட்டு யாழ்ப்பாணம்-அச்சுவேலியில் உள்ள நிலாவரைக் கிணறுகள் போன்ற குழிகள்) குகைக் குழியறை அமைப்புகள் 1980ம் ஆண்டில் தான் அதிசயமாகக் கண்டு பிடிக்கப் பெற்றன. இதுவே கண்டுபிடிக்க பெற்ற உலகக் குகைக் குழியறைகளில் மிகப் பெரிய தரைக்குக் கீழ் நீராழிக் குகைகளாகக் கணிக்கப் பெறுகின்றன.

இக்குழியறைகள் மிக ஆழமாக இருக்கின்றன. 700 மீற்றர் நீளமும் 300 மீற்றர் அகலமும் கொண்டு அமைந்திருக்கின்றன. இவற்றின் கூரைகள் 10 முதல் 120 மீற்றர் உயரம் கொணடவையாகவும் இருக்கின்றன. சரவக் குகைக் குழியலறைக் கண்டு பிடிப்புக்குப் பின்னர் இதன் பின்னல் அமைப்பில் பல சிறிதும் பெரிதுமான குகைக்குழி கண்டு பிடிப்புகளாக இருப்பதாக இன்றும் ஆய்வாளர்கள் ஆராய்கிறார்கள்.

மலை அடிவாரத்தில் 200 மீற்றர் ஆழத்துக்குக் கீழேயும் அவ்விதமான அறைகள் இருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இதன் கீழ், 75 மீற்றர் ஆழத்தில் உள்ள பகுதிகளில் உள்ள நீர் சுரக்கும் நீர் நிலை கொண்ட குழியறைகளும் மற்றக் குழியறைகளுடன் தொடர்பு கொண்டு இருப்பதாகவும் கண்டு பிடித்திருகிறார்கள்.

இப்பொழுது, இவ்வரிய குழியறைகளையும் தரைக்கீழ் ஓடும் நதிகளையும் கண்டு களிக்கப் பொது மக்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப் பெற்றிருக்கின்றது அதனால், இப்பகுதி ஒரு சுற்றுலாத் தலமாகப் பூங்கா (Park) போல் உலகை ஈர்த்து விளங்குகிறது.

**இக்குழி அறைகள் எவ்வாறு உருவாகின்றன?**

போர்னியோத் தீவு, புவி மத்திய கோட்டில் அமைந்திருப்பதால், அங்கு எப்பொழுதும் வெப்பம் நிலவும். மழையும் வருடம் முழுவதும் மிகையாகப் பொழிந்து கொண்டிருக்கும். எங்கும் எதிலும் ஈரம் செறிந்து இருக்கும். அதிலும் பருவப் பெயர்ச்சிக் காலமாகவே மார்ச் மாதம் தொடக்கம் அக்டோபர் மாதம் வரையிலான காலத்தில் மழை அபரிமிதமாகப் பொழியும். ஆதலால், பல்லாயிரம் ஆண்டுகளாகக் 'குனூ ங் அபி' மலைத் தொடரிலும் அதன் மலைச் சரிவுகளிலும் மழை பொழிந்து மலையின் சுண்ணப் பாறை வழியாகச் சொரிந்து பாறைகளை உடைத்துக் கொண்டிருக்கும். இம்மலைத் தொடர், சுண்ணப் பாறையாக இருப்பதால் அதனூடாக மழை நீர் இலகுவாகப் பாறையைத் துளையிட்டு உட்புகும். இவ்வாறு பாறைகளைத் துவாரமிட்டு ஊடுருவுவதால், இத் துளைகள் சிறிது சிறிதாகப் பெருத்து ஆழமான குழிகளையும் பள்ளங்களையும் காலக் கிரமத்தில், பல் கோணங்களில், அ[illegible]ழிகளை உருவாக்கி ஆழங் காணாப் பாரிய கிணறு போன்ற குழிகளை ஆங்காங்கே உண்டு பண்ணும். மழை நீரில் உள்ள அமிலங்களும் சுண்ணப் பாறைகளைச் சிதைத்துக் கொண்டு குகை போன்ற பள்ளங்களையும் மலைப் பாறைகளுக்குக் கீழ் அங்கு உருவாக்க உதவுகிறது. மலேசியாவைச் சேர்ந்த வடமேற்குப் பிரதேசமான போர்னியோத் தீவின் சரவக் பிரதேசம் அடங்குகிறது. இப்பொழுது சரவக் பிரதேசம் முழுவதும் தேசியப் பூங்காவாக அழைக்கப்படுகிறது. இதில், இங்கு குறிப்பிடப்பெறும் குகைக்குழி அறைகள் யாவும் உள்ளடங்கும். இப் பூங்காவிலேயே உலகில் எங்குங் காணா 'பிக்மீ ச்சுரு' (Pigmy Shrew) எனப்படும் குட்டையான விலங்கினங்கள் உலாவுகின்றன. சரவக் மலைத் தொடரில் உள்ள மலைச் சிகரங்கள் ஏறத்தாழ 1750 மீற்றர் உயரம் கொண்டவையாக விளங்குகின்றன. இங்குள்ள குனூ ங்முளு (Gunung Mulu) எனும் மலைச் சிகரமே சரவக்கில் உள்ள இரண்டாவது அதிவுயரமான மலைச் சிகரமாகக் கணிக்கப் பெறுகிறது. இதன் பெயரிலேயே இங்குள்ள பூங்காவும் பெயர் பெறுகிறது. இம் மலைச் சிகரம் 2377 மீற்றர் உயரங் கொண்டதாக இருக்கிறது. இதன் மலை முழுவதும் மணற்பாறை (Sand stone), மாப்பாறை (Shale Mountain) கொண்டவையாக உள்ளன.








**· பூங்காவின் உயிர் வாழ்வனவற்றின் வளம்**

குனூ ங் அபி மலைக் குகைகளின் உட்புறம் மிகவும் இருண்டும், ஈரக் கசிவும் (Damp) குளிரும் கொண்டதாக இருந்தாலும் அங்கு மிக அரிதாகவும் விஷங் கொண்ட தேள்கள் (Poisionous) போன்ற சிற்றுயிர்கள் வாழ்கின்றன. தேள்கள் பெரும்பாலும் நிறமற்ற ஜந்துக்களாக (Colourless Creatures)வே காணப் பெறுகின்றன. மேலும், கடும் விஷங் கொண்ட தேள்களும், குருட்டுச் சிலந்திகளும் (Blind Spiders). வெண்ணிறப் பாம்புகள் போன்றவையும் ஓரளவு தெளிவான மேலோடுகளைக் கொண்ட நண்டுகளும் இக் குகைக்குழி அறைகளிற் காணப் பெறுகின்றன. இக் குகைகளின் தரைகளில் வெளவால்களும் பகற் பொழுதுகளில் உறங்கி, இராப் பொழுதுகளில் குகைக்கு வெளியே இரை தேடிச் சென்று உண்டு, மீண்டும் குகைக்குள் வந்து வாழ்கின்றன. உலகில், மிகவும் அற்புதமும், விநோதமும் உள்ள குகைகளில் சரவக் குகைக்குழி அறைகளே மிகவும் விசித்திரமாக விளங்குவதாகக் கருதப் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இரு வேறு மாதிரிகளுடன் ஒரேயொரு படைப்பு!

'ஒளியின் மழலைகள்' என்று குழந்தைமையாய்ப் பெயரிட்டுக் கனதியான வரிகள் தாங்கி வெளிவந்திருக்கும் இக்கவித் தொகுப்பு, 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகையாளர் தவ சஜிதரனுடையது! சிந்திக்கத் தொடங்கியபோது மரபும் நவீனமும் இவருக்குள் முட்டி மோதி முரண்பட்டுக் கொண்டன போலும்! ஒரே கவிதைத் தொகுப்பில் இவ்விரு ஜாதிகளையும் பிரித்துத் தந்திருக்கிறார். மரபைப் படிக்கும் போது புதுக்கவிதையும், புதுக்கவிதையைப் படிக்கும் போது நவீனமும் தலைகீழாகத் தொங்கித் தவம் கிடக்கின்றன இவருடைய நூலில்.

புதுமை செய்ய நினைத்துப் பிரிவினை செய்து விட்டார் கவிதாவை! ஆனால் பாடுபொருட் தெரிவுகளும், பதங்களை நகர்த்திச் சென்றுள்ள விதமும் பண்டிதத் தனமாய்த்தான் பதிவு காட்டிக் கிடக்கின்றன. இவற்றுக்காய் எத்தனை காலங்கள் ஆகியிருக்குமோ? என்று கேட்கத் தோன்றுகிறது. ஏனெனில் கவி வடிப்பதற்கான கணங்கள் அரிதாய்க் கிடைப்பதும், அவை சரியாய் வாய்ப்பதும் அதிசயம்தானே!

'மொழிவயப்படாதென முயல்தல்', 'மாறாதிருக்கக் கடவது இம் மழைக்காலம்', 'மனிதக் குருவி பற்றிய உனது புனைவுகள்', 'நீக்கமின்றி நீ', ஒளியின் மழலைகள்'; 'இரும்பு முகம் பற்றிய பிரத்தியேகக் குறிப்புகள்', 'பிளவு கடந்த வெளி' என எல்லோர்க்கும் பிடித்துப் போகும் மொழியழகுடனான தலைப்புகள் தாங்கிய பல கவிதைகளை உள்ளடக்கியுள்ளது 'ஒளியின் மழலைகள்'.

'கிறிப்ஸ்'ன் பதிப்பில், 100 ரூபா விலையில், மதிபுஸ்பாவின் அட்டைப்பட ஓவியத்துடன் அழகாகவும், தரமாகவும் விளங்கும் இந்நூல் பூபாலசிங்கம் புத்தகசாலையில் கிடைக்கும்.

தொடர்பு : 207**B**, றத்தோட்டை வீதி, மாத்தளை.
மெயில் - **kurumuni@yahoo.co.uk**
தொ.பே - 0714242052



# யாருக்கும் இருட்டு அழகாக இருக்கும்

முன்பு மரபுக் கவிதைகளை எழுதிக் கொண்டிருந்த சுபைர் பின் புதுக்கவிதைகள் எழுத வேண்டும் என்ற அவாவில், தினகரன் வாரமஞ்சரியில் தொடர்ந்து எழுதிய தன் கவிதைகளை நூலுருவில் தொகுத்துள்ளார்.

இந்நூலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் அவரே குறிப்பிடுவதாவது:

நீங்கள் ஏன் புதுக் கவிதைகள் எழுதுவதில்லை? புதுக் கவிதைகளுக்கு நீங்கள் எதிரியா? என்று சிலரும், உங்களுக்குப் புதுக் கவிதை எழுதத் தெரியாதா? என்று சிலரும் கேட்டனர். இந்தக் கேள்விகள் எனக்குள் ஏற்படுத்திய பாதிப்புகளால் எனக்குத் தெரிந்த வடிவத்தில் புதுக் கவிதைகள் சிலவற்றை எழுதினேன். தொண்ணூறுகளில் தினகரன் வாரமஞ்சரியில் கவிதா சாகரம் பகுதியை அலங்கரித்த எனது சில புதுக் கவிதைகளே இப்போது அழகான இருட்டாக உங்கள் கைகளைச் சூழ்ந்திருக்கின்றன. நான் விழிப்புலனுடன் இருந்த வேளையில் எழுதப்பட்ட கவிதைகளே இவை.

இப்போது விழிப்புலனற்ற நிலைக்கு வந்துவிட்டேன். எனது தற்போதைய நிலைக்குப் பொருந்தும் வண்ணம், அழகான இருட்டு என்ற கவிதையின் தலைப்பே இக் கவிதைத் தொகுதிக்குப் பெயராக அமைந்துள்ளது.

இத்தொகுதிக்கு அணிந்துரை வழங்கியுள்ள கவிஞர் வாசுதேவன் தனதுரையில்:

இத்தொகுப்பின் கவிதைகளுக்குப் பின்னால் எழுதியவரின் நல்லெதிர்பார்ப்புகளைக் கொண்ட ஒரு மனம் இருப்பது தெளிவு. இத்தகைய நல்லிதயம் கவிதைக்கு அவசியம் என்பதும் உண்மையே. வெளியில் உள்ள காட்சிகளைச் சரிவரக் காண வேண்டுமானால் முதலில் நமது கண்கோளாறற்றதாக இருத்தல் வேண்டும். கோளாறுகள் நம்மிடமே இருக்குமானால் வெளியில் உள்ள கோளாறுகளை நாம் எடை போட முடியாது. முதலில் தராசு சரியாக இருக்க வேண்டும். இல்லாமல் சரிவர அளத்தல் முடியாது.


கவிதை பற்றி என்னதான் அறிந்திருந்தாலும், கவிதை வரலாற்றைக் கரைத்துக் குடித்தாலும், கவிதையின் உத்தி முறையிலும், செய்நேர்த்தியிலும் விற்பன்னராய் இருந்தாலும் அவை எதுவுமே கவிதையைப் பெற்றுத் தரா. கவிதை முழுக்க முழுக்க வாழ்வின் விளைபொருளேயாகும். வாழ்க்கை அனுபவத்தில் கனதி ஏறாமல் கவிதை கனதி பெறாது. எழுதுபவர் தன்னளவில் ஆழ்ந்து செல்லாமல் கவிதையில் ஆழம் கூடி வராது. வாழ்க்கை மீதான பார்வை விரிவு பெறாமல் கவிதையில் வீச்சு வராது. எனவே, நல்ல கவிதையைத் தேடி நாம் வாழ்க்கைக்குள் செல்ல வேண்டும் என்று கூறியுள்ளார்.




இந்நூலைக் கிழக்கிலங்கை மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வெளியிட்டுள்ளது. விலை ரூ.150/=.
முகவரி : இல 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு.
தொ.பே : 065-2226658, 077-6041503




# அகவை 41 இல் மல்லிகை!




அயராத தேடலின் மூலமாகத் தனது அறிவுத் தளத்தை உயர்த்தி எழுத்தாளராக நிமிர்ந்தவர் அமரர் எஸ்.வீ.தம்பையா. அவரது இரண்டு நூல்கள் எமக்குக் கிடைத்திருக்கின்றன. "கடலில் கலந்தது கண்ணீர்." இது சிறுகதைத் தொகுப்பு. "நினைவின் அலைகள்". இது தன் வரலாற்று நூல். இவை இரண்டும் பரவலான ஒரு அதிமுகத்தைப் பெறாதது வருத்தத்திற்குரியதே! இனக் கலவரத்தால் நாடு சீர்குலைந்திருந்த 1983 இல் சிறுகதைத் தொகுதி வெளி வந்தது. இதுவே அடக்கி வாசிக்கப்பட்டதற்குக் காரணமென்கின்றனர்.

ஆனால், தன் வரலாற்று நூலுக்கு அறிவுலகு ஒரு கணிப்பைக் கொடுக்காது விட்டது ஏனோ புரியவில்லை. திருப்பங்கள் நிறைந்த தனது வாழ்வின் நிகழ்வுகளை அமரர் சுவை படக்கலை நேர்த்தியோடு விபரித்துள்ளார் இந் நுலில்.

பிரமுகர்களின் நினைவு கூறல் குறித்து நடாத்தப்படும் போட்டிகளை நிராகரிப்பது அப்பிரமுகர்களை நிராகரிப்பதற்குச் சமனாகும். எனவே, இத்தகைய இலக்கியப் போட்டிகளில் அனைத்துப் படைப்பாளிகளும் பங்களிப்புச் செய்வதே நாகரீகம்.

அமரர் தம்பையாவின் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற மூன்று சிறுகதைகளையும் மல்லிகையின் 41 ஆவது ஆண்டு மலரில் பிரசுரித்திருந்தால், அவைகளின் நிறை குறைகளைக் கண்டிருக்கலாம்.

வெள்ளவத்தை தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் 25.01.2006 இல் நடைபெற்ற மல்லிகை 41 ஆவது ஆண்டு மலர் அறிமுகம், அமரர் எஸ்.வீ.தம்பையா ஞாபகார்த்த சிறுகதைப் போட்டி பரிசு வழங்கல் ஆகியன சம்பந்தமான விழாவில் பிரபல எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் மேற்கண்டவாறு உரை நிகழ்த்தினார்.

இவ்விழாவிற்கு மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா தலைமை வகித்தார். மல்லிகையின் வாசனை இன்று சர்வதேச அரங்கில் வீசிக் கொண்டிருக்கிறது. இச்சாதனையை ஏற்படுத்த நான் கொடுத்த விலை என்றும் என் நெஞ்சை [illegible] நானே அச்சுக் கோர்த்து, நானே பிரதிகளை ஒப்புநோக்கி நானே சந்தைப்படுத்திய மல்லிகை இதழை என் முகத்தில் கிழித்து எறிந்தார் ஒருவர். விற்கச் சென்ற பொழுது என்னைப் பிச்சைக்காரனாக ஏளனப்படுத்தினர். ஆனால், அந்த அவமானங்களெல்லாம் சேர்ந்தே தான் இன்று ஈழத்தமிழனைத் தமிழ் இலக்கியத்தில் நெஞ்சு நிமிர்த்தச் செய்து விட்டது. இத் தமிழ் மண்ணில் 41 ஆண்டுகள் மல்லிகை வேர் பரப்பி விட்டது. நாம் இப்பொழுது மானுடத்தை இழந்து விட்டோம். அதைக் கண்டடைய வேண்டும். சாதனையாளர்கள் மறக்கப்படுகின்றனர். மல்லிகைக்கு ஒரு கண்டமாக இடப்பெயர்வு ஏற்பட்டது. அந்தக் கண்டத்திலிருந்து மல்லிகையை மீட்டெடுப்பதற்கு உதவியவர்களுள் எழுத்தாளர் அமரர் எஸ்.வீ.தம்பையாவும் ஒருவர்.

இவ்வாறு மல்லிகை ஆசிரியர் தலைமையுரையில் கூறி 41 ஆவது ஆண்டு மலர் தாமதமானதிற்கான காண காரணங்களையும் மல்லிகை அபிமானிகளுக்கு வெளிப்படுத்தினார். எஸ்.வீ தம்பையா ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில் தாட்சாயணி 1 ஆம் பரிசையும் ச.முருகானந்தம் 2 ஆம் பரிசையும் மலரன்னை 3 ஆம் பரிசையும் பெற்றனர். ஏற்புரையைத் திலீபன் நிகழ்த்தினார்.

*எம்பியெஸ்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கத்தின் தீர்வும்!



ஒரு காட்டில் சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. அது மிகுந்த கர்வத்துடன் 'நானே ராஜா என்னை விடப் பலசாலி இவ்வுலகில் யாருமே இல்லை' என்று பெருமைப்பட்டுக் கொண்டது.

ஒருநாள் நரியொன்று சிங்கத்திடம் சென்று 'ராஜாவே! ராஜாவே, உங்களை விடப் பலசாலியான ஒரு மனிதனை நான் வரும் வழியில் கண்டேன்' எனக் கூறியது.

'அப்படியா?' என்று சிங்கம் கர்ஜித்தபடியே, 'உடனே அந்த மனிதனை நான் பார்க்க வேண்டும்' எனக் கூறியது. அது கோபத்துடனும், ஆவேசத்துடனும் நரி கூறிய வழியே சென்றது.

செல்லும் வழியில் குதிரையொன்றைக் கண்டு 'நீ தானா மனிதன்?' என்று கேட்டது. குதிரை சொன்னது 'நீ தேடும் மனிதனுடைய இடத்திலிருந்து தான் வருகின்றேன். கொஞ்சத் தூரம் போனால் நீ அவனைக் காணலாம்' என்று கூறிவிட்டுப் போனது.

பின்பு சிங்கம் ஒரு மனிதனைக் கண்டு 'நீ தானா நான் தேடும் மனிதன்?' என்று கேட்டது. அதற்கு மனிதன் 'ஆம் நானே தான்' என்றான். உடனே சிங்கம் மனிதனிடம் 'உன்னுடன் சண்டை செய்ய விரும்புகிறேன். நீ தயாரா?' எனக் கேட்டது. மனிதன் சிங்கத்திடம் சில நிபந்தனைகளை விதித்தான்.

முதலில் ஒரு இரும்புக் கூண்டைக் காட்டி 'இந்தக் கூண்டில் நீ ஒருநாள் இருக்க வேண்டும். அதன் பிறகு தான் உன்னுடன் சண்டை செய்வேன்' என்றான். சிங்கமும் இணங்கிக் கூண்டுக்குள் சென்றது. உடனே மனிதன் கூண்டை அடைத்து விட்டுப் பெரிய ஓர் இரும்புக் கம்பியை எடுத்துச் சிங்கத்தைப் பலமாகத் தாக்கினான். அதன் பிறகு கூண்டைத் திறந்து விட்டு 'இப்போது சண்டை செய்வோமா?' என்று கேட்டான்.

சிங்கம் கூறியது 'எனக்கு இயலாது. நாளைக்கு வருகின்றேன்' என்று கூறிச் சென்றுவிட்டது. மறுநாள் மனிதனைத் தேடிச் சிங்கம் வந்தது. மனிதனோ சிங்கம் வரும் வழியில் பெரியதொரு கிடங்கை வெட்டிப் படுகுழியை ஏற்படுத்திக் காத்துக் கொண்டிருந்தான். சிங்கமோ வந்து படுகுழியில் விழுந்து விட்டது. மனிதன் இதுதான் சந்தர்ப்பம் என்று சிங்கத்தை எழ விடாமல் மீண்டும் பெரிய கம்பியினால் பலமாகத் தாக்கினான். உடனே சிங்கம் கூறியது. 'நானில்லைப் பலசாலி. மனிதன் தான் பலசாலி' என்று கூறி ஓட்டம் பிடித்தது.

எச்.எம்.அஸ்லம், தரம் - $6^{B}$,
மட்/ஓட்டமாவடி மத்திய கல்லூரி.

## விடுகதைகள்

1. கல் வீட்டுத் தாத்தா மெதுவாக நடப்பார். அது என்ன?
2. இதயம் போல் துடிப்பிருக்கும். அது இரவு பகல் விழித்திருக்கும். அது என்ன?
3. ஏறும் இறங்காது?

**விடைகள்**

1. ஆமை 2. கடிகாரம்
3. வயது.

ஜெ.ஜெசிந்தா, தரம் - 2,
யா/கரணவாய், தாமோதர வித்தியாலயம்.






## பழங்கள்

நல்ல நல்ல பழங்கள்
நன்றே மரத்தில் தொங்குதே,
பூத்துக் காய்த்துப் பழுத்துப்
புதிதாய்த் தினமும் தெரியுதே.
வண்ண வண்ண நிறங்களில்
வகை வகையாய் ஜொலிக்குதே,
கண்ணைக் கவரும் அழகு
கற்பனையைத் தூண்டுதே.
எண்ணந்தோறும் உன்னழகு
என்னை ஈர்க்கச் செய்யுதே
மரந்தன்னில் தொங்கும்
உன்னை சுவைத்திட
மனமும் நாடுதே.
நானும் உன்னைப் பார்க்கையிலே
நீயும் என்னைப் பார்க்கின்றாய்
என் நாவும் உன்னை சுவைத்திட
நாளும் தவமாய்க் கிடக்குதே.

சி.தர்மிகா,
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

## யாருக்கு முடி சூட்டுவது?

அரசன் ஒருவனுக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தனர். அவர்களில் யாருக்கு முடி சூட்டுவது என்ற பிரச்சினை ஏற்பட்டது. மூத்த மகனுக்கே முடி சூட்டல் வேண்டும். ஆனால் இளையவனோ விடவில்லை. எனவே அரசனுக்கு ஒரு யோசனை வந்தது. அவன் தனது புதல்வர்களிடம் 'ஆயிரம் கால் மண்டபத்தில் ஒரு முனிவரிடம் மோதிரம் உள்ளது. அதை யார் வாங்கி வருகிறாரோ? அவருக்கே முடி சூட்டுவேன்'' என்றார்.

உடனே இரண்டாவது மகன் அங்கே சென்றான். முனிவர் அவனிடம் நான்கு வினாக்களைக் கூறி இந்த இடத்தில் மோதிரம் உள்ளது. எடுத்து கொள் என்றார். வினாக்கள் வருமாறு....

1. இராவணனின் இறுதித் தலை. 2. வீட்டைத் தாங்குவது.
3. வேதத்தின் மறுபொருள். 4. வேடன் கையில் இருப்பது.

இளவரசனுக்கோ எதுவும் விளங்கவில்லை. அவன் குழப்பத்தில் சென்றுவிட்டான். பின்னர் மூத்த மகன் வந்தான். முனிவரை வணங்கினான். அவனிடமும் நான்கு வினாக்களைக் கூறி மோதிரத்தை எடுக்கச் சொன்னார். அவனோ குறிப்பிட்ட இடத்திலிருந்து மோதிரத்தை எடுத்துச் சென்றான். அவனுக்கே முடி சூட்டு விழா நடைபெற்றது. அம்மோதிரம் இருந்த இடம் எது?

பத்தாவது தூண் மறைவில்.

1. இராவணின் இறுதித் தலை - பத்தாவது.
2. வீட்டைத் தாங்குவது - தூண்.
3. வேதத்தின் மறு பொருள் - மறை.
4. வேடன் கையில் இருப்பது - வில்.

பா.லீதீப், யா/பெரிய புலம் ம.வி, யாழ்ப்பாணம்.



## நல்வழி காட்டிடுவோம்

சிறுவர் வேலை செய்திடும்
சிறுமை தன்னைப் போக்குவோம்
கருணையோடு அவர்களைக்
கல்வி கற்கச் செய்திடுவோம்
அடிமையாகச் சிறுவரை
அடக்கி ஆளும் செயலினை
மடைமை என்று கூறியே
மனதில் உறுதி புகட்டுவோம்
பாடசாலை சென்றுமே அவர்
படித்து அறிவை வளர்த்திட
நாளும் பொழுதும் உதவுவோம்
நல்ல வழி காட்டுவோம்.
நல்ல நல்ல நூல்களை
நன்கு படிக்கச் செய்குவோம்
நல்ல பண்பை வளர்த்துமே
நற்பிரஜைகள் ஆக்குவோம்.

தௌபீக் ஷர்மின், தரம் - $10^{A}$,
தி/அந்-நஹ்ஹார் ம.ம.வி, மூதூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னப் பூஞ்சிட்டுக்கள்

## பதுமைகள் காத்த சிம்மாசனம் 2

ஆர்வத்துடன் வீட்டையடைந்த அம்பி, கதவைத் தட்டியதும் தன்னைப் போன்ற ஓர் உருவம் கதவைத் திறந்ததைக் கண்டு பெரும் அதிர்ச்சியடைந்தான். அம்பி உருவில் இருந்த பூதம் அவனைப் பார்த்து முறைத்தது. அவனுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. தன்னைப் போன்ற உருவ அமைப்புக் கொண்ட ஒருவன் கதவைத் திறக்க 'நீயார், உனக்கு என் வீட்டில் என்ன வேலை?' எனக் கத்தினான்.

அதற்கு அம்பி 'உன் வீடா, இது என் வீடு, உனக்கு இங்கு என்ன வேலை என்று வியப்புடன் கேட்டான். இருவரினதும் சத்தத்தைக் கேட்ட அம்பியின் அம்மா வெளியே ஆச்சரியத்துடன் வந்தாள். உடனே அம்பி அம்மாவிடம் வியப்புடனும், குழப்பத்துடனும் அம்மா இங்கு என்ன நடக்கிறது? இவன் யார்?' எனக் கேட்டான்.

'நீ என்ன பேசுகிறாய்? இவன் என் மகன் முதலில் நீ யார் எனக் கூறு?' என அம்மா கேட்டாள். அம்பி தானே உண்மையான மகன் என அம்மாவிடம் பலமுறை கூறியும் அவள் நம்புவதாக இல்லை. அம்பியின் தொல்லை தாங்காமல் பூதமும் அம்மாவும் சேர்ந்து அம்பியை விரட்டிக் கீழே தள்ளிக் கதவை மூடினார்கள்.

செய்வதறியாத அம்பி கடைசியாக நாட்டை ஆளும் அரசனிடம் சென்று முறையிட வேண்டும் எனத் தீர்மானித்து, அரண்மனைக்குச் சென்றான். ராஜாவிடம் அம்பி தன் கதையைக் கூறினான். அதனைக் கேட்ட ராஜா இருவரையும் ஒரே நேரத்தில் அரண்மனைக்கு வரும்படி கூறினார். அவ்வாறே வந்த அம்பியும், பூதமும் ஒரே உருவினைக் கொண்டிருந்ததனால் அரசனால் உருவத்தின் மூலம் உண்மையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ராஜா இருவரிடமும் பல கேள்விகளைக் கேட்டும் ஒன்றும் கண்டு பிடிக்கவில்லை.

அரசனால் கண்டு பிடிக்க முடியாவிடின் வேறு யாரால் கண்டு பிடிக்க முடியும்? என்ற கேள்விக்கு அம்பி பதில் தெரியாதவனாக இருந்தான். ராஜாவால் இப்பிரச்சினைக்குத் தீர்வுக்காண முடியவில்லை.

அரண்மனையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கையில் அம்பி வயலிலே விளையாடிக் கொண்டு இருந்த சிறுவர் கூட்டத்தைக் கடந்து சென்றான். அப்போது ஒரு சிறுவன் திடீரென ஓடிவந்து 'நீங்கள் ஏன் இவ்வளவு சோகமாக இருக்கிறீர்கள்?' என வினவினான். அதற்கு அம்பி 'எனக்குதவி செய்ய யாருமில்லை.என் அம்மாவும் இப்போது ஒரு பூதத்தின் பிடியில் இருக்கிறார்' எனத் துக்கத்துடன் கூறினான். அதற்கு மறுமொழியாக அச்சிறுவன் எங்கள் மன்னனிடம் வாருங்கள்; அவர் உங்கள் கஷ்டங்களைத் தீர்த்து வைப்பார்' எனக் கூறினான்.

'நான் இப்போது தான் அரசனிடம் இருந்து விடைபெற்று வருகிறேன்' என்று அம்பி சோர்வாகக் கூறினான். அச்சிறுவன் அப்போது 'இல்லை, இல்லை அந்த ராஜா அல்ல. எங்கள் மன்னனிடம் வாருங்கள்' என வற்புறுத்தினான். அம்பி குழப்பத்துடன் 'உங்கள் மன்னனா? ஒரு நாட்டில் இரண்டு மன்னர்களா? எவ்வாறு இது?' எனப் பல வினாக்களைக் கேட்டான்.

'சும்மா வந்து உங்கள் பிரச்சினையைக் கூறுங்கள்' எனக் கூறிய அந்தச் சிறுவன் அம்பியைக் கையினால் பிடித்து இழுத்தான். அம்பியும் அவனுடன் சென்றான். அச்சிறுவன் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர் கூட்டத்தின் அருகே ஒரு பெரிய மண்மேட்டில் இருந்த சிறுவனிடம் அம்பியை அழைத்துச் சென்றான். அம்பியைக் கூட்டி வந்த சிறுவன் மண்மேட்டில் வீற்றிருந்த மற்றொரு சிறுவனைப் பார்த்து வணங்கினான். பின் 'மன்னா, இம்மனிதன் விசித்திரமான ஒரு பூதக் கதையைக் கூறுகிறான். அத்துடன் நீதி வேண்டும் எனவும் கேட்கிறான்' என்றான்.

'நான் உங்கள் கதையைக் கேட்க விரும்புகிறேன். உங்கள் கதையைக் கூறுங்கள்' என்றான் மன்னன் என அழைக்கப்பட்டவன். தன்னுடன் சிறுவர்கள் விளையாடுகிறார்கள் என நினைத்து 'இது விளையாட்டல்ல, என் வாழ்க்கை' எனக் கோபத்துடன் கூறினான் அம்பி.

அப்போது மன்னனான சிறுவன் 'நாங்கள் உங்களுடன் விளையாடவில்லை, நாங்கள் உங்களுக்குதவி செய்ய விரும்புகிறோம்' எனப் புன்னகையுடன் கூறினான். அச்சிறுவன் தன்னைப் பற்றி இரக்கத்துடன் கேட்பதால் இச்சிறுவனிடம் தன் கதையைக் கூறுவோம் என எண்ணி அம்பி தன் கதையைக் கூறினான்.

கதை பெருமூச்சுடன் அம்பியின் வாயிலிருந்து வந்தது. மன்னன் கூறினான். 'என்னால் இந்தப் பூதப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்... ஆனால், ஒரு நிபந்தனை.....!' என்றான்.

'அது என்ன நிபந்தனை?' குழப்பத்துடன் அம்பி கேட்டான்.

'நான் நாளை தீர்ப்பு வழங்குவேன். அன்று ஊர் மக்கள் நாட்டின் அரசர், அமைச்சர்கள் அனைவரும் சமூகமளிக்க வேண்டும்' என்றான். அம்பியினால் பதில் கூற முடியவில்லை. சிறிது நேர யோசனையின் பின் 'சரி' எனக் கூறினான்.

அம்பி ராஜாவிடம் சென்று நடந்தவற்றைக் கூறினான். சிறுவன் நாளை தீர்ப்பு வழங்க அரசரையும், அமைச்சர்களையும், ஊர் மக்களையும் சமூகமளிக்க [illegible] விதித்திருப்பதையும் தயக்கத்துடன் கூறினான்.

அம்பியின் எண்ணத்திற்கு மாறாக ராஜாவின் முகத்தில் ஒரு சிறு புன்னகை. 'நான் வருகிறேன். என்னைப் பல நாட்களாகத் தூக்கமின்றிச் சிந்திக்க வைத்த பிரச்சினை இது. என்னால் தீர்ப்புக் கூற முடியாத இந்த பிரச்சினைக்கு ஒரு சிறுவன் தீர்ப்புக் கூறுகிறான் எனின், அவனது தீர்ப்பை அறிய ஆவலாக உள்ளேன்' எனக் கூறினார்.

மறுநாள் காலை ராஜாவும் அவரது மந்திரி சபையும் ஊர் மக்களனைவரும் வயல் வெளியில் கூடினார்கள். அவர்களுடன் பூதமும் அம்பியின் அம்மாவும் இருந்தனர். பூதம் தனக்குள்ளே 'ராஜாவால் தீர்க்க முடியாத பிரச்சினையை இச் சிறுவனால் தீர்க்கவே முடியாது' என நினைத்துக் கொண்டு நின்றது.

மன்னர் என அழைக்கப்படும் சிறுவன் ராஜாவை வணங்கினான். பின் மணமேடையின் மேல் அமர்ந்து கொண்டான். அவன் முகம் அப்போது பிரகாசமாகியது. அப்போது ராஜா தன் கம்பீரக் குரலில் 'நான் இக்காலை வேளையில் இங்கு வந்ததற்குக் காரணம் இச்சிறுவன் என்னையும், அம்பியையும் குழப்பிக் கொண்டு இருக்கும் பூதப் பிரச்சினைக்கு நல்ல ஒரு தீர்வு வழங்குவான் என அம்பி கூறியதாலேயாகும். அவ்வாறு ஒரு நல்ல தீர்வு கிடைக்காவிடின் அரசரினதும், அமைச்சர்களினதும், ஊர் மக்களினதும் நேரத்தை வீணாக்கியதற்குக் கடும் தண்டனை வழங்கப்படும் எனவும் அச்சிறுவனைப் பார்த்துக் கூறினார். 'சரி மகாராஜாவே' எனச் சிறுவன் திடமாகக் கூறினான். அங்கிருந்த மக்கள் அனைவரும் கண்கள் சிமிட்டாமல் ஒரு சிறுவன் நீதி வழங்கத் தயாராகிறான். நாட்டின் அரசர் ஒரு பக்கமாக நின்று வேடிக்கை பார்க்கின்றதைப் பார்த்து, ஆச்சரியப்பட்டனர். சிறுவன் தீர்ப்பு வழங்கத் தயாரானான்.




**(அடுத்த இதழில் முடியும்)**


**- எஸ்.ஷர்மினி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டுப் பாதை




பட்டு மார்க்கமானது ஏறக்குறைய 4000 மைல் நீளமுள்ள பாதையாகும். கி.மு.500 முதல் கி.பி.1500க்கு இடைப்பட்ட காலம் வரை உலகிலேயே மிக முக்கிய பாதையாக, ஐரோப்பா, ஆசியா மற்றும் அதன் அயல் நாட்டு மக்கள் இந்தியா, சீனா ஆகிய நாடுகளுக்குச் செல்வதற்கு நுழைவாயிலாகப் பட்டு மார்க்கம் விளங்கியது.





### கிறிஸ்துவுக்கு முன் 300

இக்காலத்திலேயே சீனாவில் பட்டுப்பூச்சி வளர்ப்பு ஆரம்பமாகியது. அவர்கள் பட்டு நூலினை உபயோகித்துப் பட்டுப் புடைவைகளைத் தயாரித்தனர். உலகிலேயே அத்தகைய தயாரிப்பில் ஈடுபட்ட முதலாவது நாடு சீனாவாகும்.

### கிறிஸ்துவுக்கு முன் 500 முதல் 200 வரை

சீனாவால் மேற்குலக நாடுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பட்டுப்புடைவைகள் மக்களால் மிகவும் விரும்பப்பட்டன. சீனாவில் இருந்து மத்திய ஆசியாவிற்கும் இந்தியாவிற்கும் வரும் வர்த்தகப் பாதையாகப் பட்டு மார்க்கம் திறக்கப்பட்டது. அது ஜேட் (Jade) எனும் இடத்தில் இருந்து சீனாவையும் கொட்டன் (Khotan) நகரத்தையும் தொடர்பு படுத்துவதில் வெற்றி பெற்றது.

### கிறிஸ்துவுக்கு முன் 4 ஆம் நூற்றாண்டு

இந்நூற்றாண்டிலேயே இந்தியாவில் பௌத்தம் மலர்ந்தது. அங்கிருந்து வடதிசைக்குப் பௌத்த தர்மம் பரவத் தொடங்கியது.

### கி.மு 3 ஆம் நூற்றாண்டு

இக்காலத்திலேயே பொருட்களைக் கொண்டு செல்வதற்காக அராபியர் ஒட்டகங்களை வீடுகளில் வளர்க்க ஆரம்பித்தனர்.

### கி.மு 2 ஆம் நூற்றாண்டு

இக்காலத்தில் இந்தப் பாதை பல கிளைகளாக விரிந்தது. பெரும்பாலான வர்த்தகப் பொருட்கள் இந்தப் பாதையின் ஊடாகக் குறுகிய தூரத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு வழிப்போக்கருக்குக் கையளிக்கப்பட்டது. இடையில் குறுக்கிடும் நாடுகள் ஊடாகக் கடந்து செல்லும் பொழுது அந்நாட்டு அரசுகள் அவர்களிடம் வரி அறவிட்டன. சீன மக்களுக்குத் தேவையான குதிரைகளை மேற்கத்தைய நாடுகளிலேயே வாங்கினர். இதனால் இந்தப் பண்டமாற்று நடவடிக்கைக்காக ஆயிரக்கணக்கான மைல் தூரத்தில் இருந்து பொருட்களை எடுத்து வரவேண்டி இருந்தது.

### கி.மு 206 முதல் கி.பி 220 வரை

இது சீன சாம்ராச்சிய ஹென் யுகமாகும். சீனாவின் எல்லையை மேற்கு எல்லையில் உள்ள டக்ளவாகான் எனும் வனாந்தரம் வரை விரிவுபடுத்துவதில் சீனர்கள் வெற்றி கண்டனர். (இப்பிரதேசம் இன்று 'ஜின்ஜியேன்யங்' என அழைக்கப்படுகின்றது) இதனால் மத்திய ஆசியா மற்றும் அதனைச் சூழவுள்ள பட்டுமார்க்கம் ஊடாக நடந்த வர்த்தக நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதிலும் அதனை நிர்வகிப்பதிலும் சீனப் பேரரசினர் வெற்றி பெற்றனர். சீனப் பட்டுத் துணிகள் இந்த யுகத்திலேயே முதன்முதலாக உரோமப் பேரரசிற்கு விற்பனை செய்யப்பட்டது.

### கி.மு 138 முதல் 125 வரை

சீனப் பேரரசினால் பல்வேறு நாடுகளுடன் இராஜரீக தொடர்புகளும் ஏற்படுத்தப்பட்டது. "சேன் க்வேன்" எனும் இராஜதந்திரி பட்டுமார்க்க நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதில் பெரும் தொண்டாற்றிய சீனராவார்.

### கி.மு 53

முதலாவது யுத்தம் கி.மு 53 இல் நடைபெற்ற போது உரோமப் பேரரசன் பாரசீகத்தை ஆக்கிரமித்து அங்கிருந்த பெருந்தொகையான பட்டினைத் தமது நாட்டிற்குக் கவர்ந்து சென்றான். அத்துடன் உரோமப் பேரரசு சீனாவுடன் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

### கி.பி முதலாம் ஆண்டு

இக்காலத்தில் பட்டு உடைகள் உரோமில் மிகவும் பிரபல்யம் அடைந்தன. பிரபுக்கள் மத்தியில் பட்டுப் புடைவை அணிவது சம்பிரதாயமாகியது.

### கி.பி முதலாம் நூற்றாண்டு

பௌத்த மதம் இந்தியாவில் இருந்து மத்திய ஆசியா வரை பரவத் தொடங்கியது. சீனாவில் இருந்து பௌத்த பிக்குகள் இந்தியாவிற்கு வந்து மத போதனைகளைக் கேட்டனர்.

### கி.பி 220

பல்வேறு ஆக்கிரமிப்புக்களால் ஹென்ஸ் பேரரசு வீழ்ச்சி அடைந்தது. சீனப் பேரரசு இரு பெரும் பிரிவுகளாகப் பிரிந்தது. நிலையான மக்கள் கூட்டத்தினர் தமக்கு வேறொரு மதம் தேவையென உணர்ந்தனர்.

### கி.பி 3 ஆம் நூற்றாண்டு

முழு ஆசியாவிலும் பட்டுத்துணி மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்தது. இதனால் ஆசியாவில் பல்வேறு நாடுகளில் பட்டுத்துணி மற்றும் பட்டு உடைகள் நெய்வது ஆரம்பமாகியது.

### கி.பி 4 ஆம் நூற்றாண்டு

மிகப் பெரிய பௌத்த குகை விகாரைகள் சீனாவின் ட்ரன்ஹென்ங் பிரதேசத்தில் கட்டப்பட்டது.

### கி.பி 5 ஆம் நூற்றாண்டு

மத்திய ஆசிய நாடுகளிலும் பட்டுப்பூச்சி வளர்க்கும் பண்ணைகள் உருவாகின. சீன இளவரசன் ஒருவனால் பட்டுப்பூச்சி முட்டை களவாடப்பட்டு மத்திய ஆசிய வலயத்திற்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

### கி.பி 6 ஆம் நூற்றாண்டு

சீனாவில் பௌத்தர்களின் தொகை இரண்டு மில்லியனாக அதிகரித்தது. கி.பி 6 ஆம் நூற்றாண்டில் ஜப்பானில் பௌத்த பாடசாலைகள் உருவாகின. ஆங்காங்கே உருவாக்கப்பட்ட இந்தப் பாடசாலை முறையினால் ஜப்பானுக்குப் பெரும்புகழ் உண்டானது. கி.பி 6 ஆம் நூற்றாண்டில் மேற்குலக நாடுகளில் விவசாயப் பண்ணைகள் உருவாகின. அதன்படி ஐரோப்பாவில் குறிப்பிட்ட சில இடங்களில் பட்டுப் பூச்சி வளர்ப்பும் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டது.

### கி.பி 618

கி.பி 618-907 வரை உள்ள காலப்பகுதி சீனாவில் டேன்க் சக்கரவர்த்தியின் ஆட்சி காலமாகும். டேன்க் சக்கரவர்த்தியின் ஆட்சி காலத்தில் வெளிநாட்டுக் கலாசாரத்தின் தாக்கம் சீனாவைப் பாதித்தது. இருந்த போதிலும் [illegible]த்தம் தொ[illegible] சீனாவில் நிலைத்திருந்தது.

### கி.பி 632

இஸ்லாமிய மார்க்கத்தினரின் இணையில்லாக் கௌரவத்திற்கும் உரித்தான முஹம்மது நபி அவர்கள் காலமானார்கள்.

### கி.பி 638


கிறிஸ்தவ மதம் உலகெங்கும் பரவ மதப் பெரியார்கள் நடவடிக்கை எடுத்தனர். மிஷனரிக் கல்வி முறையை கிறிஸ்தவர்கள் பட்டு மார்க்கம் ஊடாகச் சீனாவுக்கு எடுத்து வந்தனர்.


### கி.பி 682


அராபியத் தளபதியான உக்பா இபனின் (Uqba Iban) தலைமையின் கீழ் இஸ்லாமிய மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய நிர்வாகப் பிரதேசம் ஆரம்பமாகி, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய கண்டங்களுக்கும் பரந்து விரிந்து சென்றது.


### கி.பி 750

தரைமார்க்கமாகப் பட்டு புகழ் பெற்றிருந்தது. எனினும், கி.பி 750 அளவில் அப்பாதையில் போக்குவரத்து நடவடிக்கைகள் சிறிது சிறிதாக நலிவடையத் தொடங்கின. இக்காலத்தில் ஷியான் (XIAN) நகரம் சீனாவின் தலைநகராக விளங்கியது. அது அக்காலத்தில் உலகிலேயே செல்வந்த நகரங்களில் ஒன்றாக விளங்கியதோடு 2 மில்லியன்









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...தையில்..... ஒரு பயணம்

வேறு
நய்வது
வின்
க்கும்
ால்
ிய
ல்லியனாக
ல் பௌத்த
க்கப்பட்ட
பரும்புகழ்
நாடுகளில்
ரோப்பாவில்
ும் பெரிய
ில் டேன்க்
வர்த்தியின்
க்கம்
் தொ...
கள்
யார்கள்
எடுத்து
a Iban)
படையாகக்
ஆபிரிக்கா,
சென்றது.
ானினும்,

சனத்தொகையைக் கொண்ட நகராகவும் காணப்பட்டது. இதில் 5000 வெளிநாட்டவரும் அடங்குவர்.

**கி.பி 8 ஆம் நூற்றாண்டு**

இஸ்லாமிய மதம் மத்திய ஆசியாவிற்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. பல பௌத்த சிலைகளும், குகைச் சித்திரங்களும் அவர்களால் நிர்மூலமாக்கப்பட்டன. மேற்குச் சீனாவில் இருந்த பௌத்த விகாரைகள் கைவிடப்பட்டன. பின்பு காலத்திற்குக் காலம் ஏற்பட்ட மணற் புயலினால் இப்பௌத்த விகாரைகள் முற்றாக மூடப்பட்ட அது நிரந்தரமாக மனித நடமாட்டம் இல்லாதொழிந்தது.

**கி.பி 845**

டேன்கே பேரரசன் பௌத்த மதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை ஆரம்பித்தான். அவன் 4600 விகாரைகளைத் தரைமட்டமாக்கினான். 300000 பிக்கு மற்றும் பிக்குணிகளை விரட்டினான். சித்திரவதை செய்தான். இச்செயல் மூலம் பட்டுமார்க்கத்தின் பெறுமதியும் மறைந்து போனது.

**கி.பி 10 ஆம் நூற்றாண்டு**

கி.பி 907 இல் டேன்க் பேரரசனின் ஆதிக்கம் வலுப்பெற்று, பௌத்த மதம் அழிவுற்றது. சீன அரசால் அந்நிய மத போதனைகள் மற்றும் பிரசாரங்கள் தடை செய்யப்பட்டன. பௌத்த மதத்தைப் பரப்பப் பெருமுயற்சி எடுத்த ஹின்பஹியன் நகரவாசிகள் கூடப் படிப்படியாக இஸ்லாமிய மதத்தைத் தழுவத் தொடங்கினர்.

**கி.பி 12 ஆம் நூற்றாண்டு**

பட்டுப்பாதை மூடப்பட, வியாபாரிகள் வர்த்தக நடவடிக்கைக்காகக் கடல்பாதையில் தமது கவனத்தைச் செலுத்தினர். இத்தாலியும் பட்டு நூல் தயாரிக்கவும் பட்டு உடைகளை உற்பத்தி செய்யவும் தொடங்கியது.

**கி.பி 13 ஆம் நூற்றாண்டு**

மத்திய யூரோ ஆசியாவின் பல்வேறு பிரதேசங்களில் இஸ்லாமிய மார்க்கம் பரவி இருந்தது.

**கி.பி 1206**

முகலாய பேரரசனான 'கான்' தலைமையின் கீழ் சீனா ஆக்கிரமிக்கப்பட்டது. ஆசியாவின் பெருமளவு பிரதேசங்கள் அந்த யுத்த நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட்டன. பின்னர் சீனாவில் இரகசியமாகப் பாதுகாக்கப்பட்ட பல விடயங்கள் வெளி உலகிற்குத் தெரியவந்தன. இந்தப் பின்னணியில் இஸ்லாமிய மார்க்கம் சீனா எங்கும் வியாபித்தது. இஸ்லாமிய மார்க்கம் 13ம் நூற்றாண்டில் சீனாவில் மிக முக்கிய மதமாக உருவெடுத்தது.

**கி.பி 1279**

குப்ளாய் கான் மன்னனால் யுனான் உருவாக்கப்பட்ட பேரரசிற்கு முழுச் சீனாவும் அடி பணிந்ததோடு மத்திய ஆசியாவில் இருந்து கொரியா வரையிலான பாரிய பிரதேசம் அவனின் ஆணைக்கு அடி பணிந்தது. ஐரோப்பிய உல்லாசப் பயணிகள் சீனாவை நெருங்கினார்கள்.

**கி.பி 1368**

முகலாயப் பேரரசைத் தோற்கடித்து ஆட்சியாளனான 'மிங்' சீனாவை மையமாக வைத்து ஆட்சி செய்து வந்தான். அவனுடைய ஆட்சிக் காலத்தில் வெளிநாடுகளுடனான தொடர்புகள் முற்றுமுழுதாக நிறுத்தப்பட்டது. அவன் தேசிய வாதத்தில் கவனம் செலுத்தினான். உலகில் அந்நிய இனத்தவர் சீனாவை ஆக்கிரமிப்பதற்கான சகல வாய்ப்புகளையும் இல்லாதொழிப்பது 'மிங்' பேரரசின் முக்கிய இலக்காக இருந்தது.

**கி.பி 14 ஆம் நூற்றாண்டு**

தரைமார்க்கமாய் வர்த்தக நடவடிக்கைக்காகப் பயணம் செய்வதை விடக் கடல் மார்க்கம் மிகச் சிறந்தது என்ற கருத்து வளர்ச்சி அடைந்தது. இதனால் உயர்ந்த தரமான கப்பல் மற்றும் இயந்திரங்கள் உருவாகத் தொடங்கியது.

**கி.பி 15 ஆம் நூற்றாண்டு**


இந்தக் காலத்தில் முழு மத்திய ஆசியாவிலும் இஸ்லாமிய மதம் வேரூன்றியது.

**கி.பி 1870**


பட்டு மார்க்கம் என்ற பதத்தை முதன்முதலாக ஜேர்மன் சஞ்சாரியான பெரன் பேர்டினன்ட் வொன்ரிச் தொபன் (Baron Ferdinand Von Rich Thofen) என்பவரே பயன்படுத்தினார்.


**20 ஆம் நூற்றாண்டு**

20ம் நூற்றாண்டின் புகழ் பெற்ற அகழ்வாராய்ச்சியாளர்களான ஸ்புவேன் ஹெசன் மற்றும் அவரல் ஸ்டெயின் ஆகியோரால் பட்டு மார்க்கத்தில் அகழ்வாராய்சிகளை நடத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உயர்ந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திப் பல புதைப் பொருட்களைக் கண்டு பிடிப்பதில் அவர்கள் வெற்றி பெற்றனர். 1994 முதல் நாசா நிறுவனம் பட்டு மார்க்கம்



சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொள்வதனால் வரலாற்றில் மறைந்த பல்வேறு தகவல்களையும் வெளிக் கொணர முடியும் என்பதில் ஐயமில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கொட்லாந்து

(சென்றவாரத் தொடர்ச்சி)





## மதம்-மொழி

ஸ்கொட்லாந்து நாட்டின் மொத்தச் சனத்தொகையில் 70% த்தினர் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதத்தினராகவே உள்ளனர். மற்றவர்கள் உரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள் இவர்களை விட யூதர்கள், இந்து, இஸ்லாமியர் மற்றும் பௌத்த மதத்தினரும் வாழ்கின்றனர்.

ஆங்கில மொழி பிரதான மொழியாக உள்ளது. ஆங்கில மொழியை 30% த்தினரே பயன்படுத்திய போதும் ஸ்கொட்லாந்து மொழியையே அதிகமானோர் பயன்படுத்துகின்றனர்.

## கல்வி

ஸ்கொட்லாந்து நாட்டினர் தமக்கே உரிய கல்வி முறையொன்றையே பயன்படுத்தி வருகின்றனர். 16 வயது வரை சகலரும் கல்வி கற்க வேண்டும். கல்வி நடவடிக்கைகள் யாவும் அரசு மூலமே செயற்படுத்தப்படுகின்றது.

## பொருளாதாரம்

ஸ்கொட்லாந்து நாட்டின் பொருளாதாரமானது பெரிய பிரித்தானியாவின் சட்டதிட்டங்களுக்கமையவே நடைபெற்று வருகின்றது. 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இந்நாட்டின் பொருளாதாரம் மாற்றமடையத் தொடங்கியது. வங்கி நடவடிக்கைகள் மக்கள் தொடர்பு மற்றும் உற்பத்திச் செயற்பாடுகள் அனைத்தும் வேகமாக வளர்ச்சி கண்டன.








ஸ்கொட்லாந்தின் பிரதான ஏற்றுமதியாக இயற்கை வாயு மற்றும் பெற்றோலியம் காணப்படுகின்றது. இதனைவிட இலத்திரனியல் உற்பத்திகளும் பிரதான இடத்தைப் பெறுகின்றன.

ஸ்கொட்லாந்து நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 3/4 பங்கு விவசாய நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. மிருக வளர்ப்பு மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்காகவே இப்பிரதேசங்கள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. மிருக வளர்ப்பில் ஸ்கொட்லாந்து முதலிடம் பெற்ற நாடாக உள்ளது. அது மட்டுமன்றி மீன் பிடித்தொழில் மற்றும் மர உற்பத்தி என்பன வெற்றிகரமாக இங்கு நடைபெறுகின்றன.



ஆனாலும் பொருளாதாரத்தில் அதிகளவு வருமானம் மசகு எண்ணெய் மூலமே கிடைக்கப் பெறுகின்றது. இதன் காரணமாக நாட்டிலிருந்து வெளியேறும் பெருந்தொகைப் பணத்தைத் திரும்பவும் பெற்றுச் சேமிக்கக் கூடியதாக உள்ளது.

## போக்குவரத்து-தொலைத் தொடர்பு

48,000 கிலோமீற்றர் நீளமான பெருந்தெருக்கள் அமைப்பை ஸ்கொட்லாந்து கொண்டுள்ளது. மனிதர்களின் போக்குவரத்துத் தேவையைப் பஸ்களே நிறைவு செய்கின்றன. எடின்பரோ, க்கிளாஸ்கோ மற்றும் அபர்டீன் எனும் நகர்களில் சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன.




ஒவ்வொரு நாளும் சுமார் 17 புதினப் பத்திரிகைகளும் வாரந்தோறும் 120 சஞ்சிகைகளும் வெளிவருகின்றன.

## நிர்வாகம்

பெரிய பிரித்தானியாவின் ஒரு பகுதியாக இருப்பதன் காரணமாக நாடு தொடர்பான சகல தீர்மானங்களையும் பெரிய பிரித்தானியாவிலுள்ள பாராளுமன்றமே தீர்மானிக்கும். ஸ்கொட்லாந்து நாட்டிற்குப் பெரிய பிரித்தானிய பாராளுமன்றில் கீழ்ச் சபைக்கு 72 பேரைத் தேர்ந்தெடுப்பதற்குச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனாலும் 1999 ஆம் ஆண்டிலிருந்து ஸ்கொட்லாந்துப் பாராளுமன்றம் செயற்படுகின்றது. இதன்படி கல்வி, சுகாதாரம், சூழல், பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பல நடவடிக்கைகள் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஸ்கொட்லாந்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஸ்கொட்லாந்து அரசின் நிறைவேற்று அதிகாரம் அமைச்சரவையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஸ்கொட்லாந்து நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களைப் பெறும் கட்சியிலிருந்து அமைச்சர்கள் தெரிவு செய்யப்படுவர்.



ஸ்கொட்லாந்துப் பாராளுமன்றம் 129 அங்கத்தவர்களைக் கொண்டது. உள்நாட்டு நடவடிக்கைகள் தொடர்பாகத் தீர்மானங்களை ஸ்கொட்லாந்துப் பாராளுமன்றமே மேற்கொள்கிறது.

எஸ். கிறேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீங்கு

சந்திரன் மகா குழப்படிக்காரன் எனப் பெயர் பெற்றவன். நண்பர்களுடன் சண்டை பிடிப்பது மட்டுமன்றி, மிருகங்களைக் கொடுமைப் படுத்துவதிலும் அவன் அலாதிப் பிரியம் காட்டுவான். தெருவில் செல்லும் நாய், பூனை ஆகியவற்றைக் கண்டால் கூட விட்டு வைக்கமாட்டான். கல்லால் மட்டுமன்றிக் கையில் கிடைக்கும் எதனாலும் எறிந்து அவற்றைக் கொடுமைப் படுத்துவான். பெரியவர்கள் கூறும் எந்தவொரு அறிவுரையையும் அவன் கேட்பதில்லை.

அப்படியிருக்கையில் ஒருநாள் சந்திரன் தனது நண்பர்கள் சிலருடன் காடொன்றிற்குள் சென்றான். காட்டிற்குள் சென்று கொண்டிருக்கையில், குழப்படிக்காரச் சந்திரனுக்கோ இருப்புக் கொள்ளவில்லை. காட்டில் கண்ட பறவைகள், சிறிய பிராணிகள் எல்லாவற்றையும் ஒவ்வொரு வகையில் வருத்திக் கொண்டே வந்தான். கையில் தடியொன்றை வைத்துக் கொண்டு, அந்தத் தடியினால் பறவைகளுக்கு வீசி, வீசி எறிந்து தாக்கினான்.

நண்பர்கள் அவனைத் தடுத்த போதிலும் சந்திரனோ அதனைப் பொருட்படுத்தவில்லை. இப்படி அவன் ஒவ்வொன்றையும் தாக்கிக் கொண்டு செல்கையில் அழகிய கிளியொன்றைக் கண்டான். உடனே அந்தக் கிளியையும் பதம் பார்க்க வேண்டும் என அவனுக்குத் தோன்றியது. மரப்பற்றையொன்றிற்குள் பதுங்கினான். அங்கு காணப்பட்ட தடியொன்றைக் கையில் எடுத்தான். எடுத்தவன், கிளியைத் தாக்குவதற்குரிய தருணத்திற்காகக் காத்திருந்தான். சரியான தருணம் வரவே கீழே தடியை அந்தக் கிளியை நோக்கி வீசியெறிந்தான். நேரே அந்தப் பொல்லுத்தடி கிளியைத் தாக்கியது. கிளியோ 'கீச்... கீச்....' எனச் சத்தமிட்டுக் கொண்டு பறக்க முயன்றது. ஆனால், அதனால் பறக்க முடியவில்லை. அதன் சிறகில் தடி தாக்கியதால் காயப்பட்டு அல்லலப்பட்டு கீழே வீழ்ந்தது.

சந்திரனுக்கோ இதனைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி. தான் ஏதோ வீரதீரச் செயலைச் செய்துவிட்டதாக எண்ணினான். ஓடிச் சென்று கிளியைக் கையில் எடுத்துக் கொண்டான். கிளியோ துடிதுடித்தது. ஆனால் அதனை அவன் பொருட்படுத்தவில்லை.




கிளியை எடுத்துக் கொண்டு திரும்பிப் பார்த்த சந்திரன் அதிர்ச்சியடைந்தான். கிளியைப் பிடிக்க முயன்றதால் சந்திரன் தனது நண்பர்களை வழி தவறவிட்டுவிட்டான். அந்த நடுக்காட்டில் எங்கு போவதெனத் தெரியாமல் தடுமாறிய சந்திரன், ஏதோ கால்போன போக்கில் நடந்தான். இப்படியே நடந்து செல்கையில் குரங்கொன்று பாய்ந்து வந்து அவனைத் தாக்கியது. கீழே சுருண்டு விழுந்த சந்திரன் எழுந்து ஓட முயன்றான். ஆனால், ஓட முடியவில்லை. குரங்கு தாக்கிக் கீழே விழுந்ததில் அவனது கால் முறிந்திருந்தது. தனது நிலையை எண்ணி அவன் மிகவும் கவலைப்பட்டான். நொண்டி... நொண்டி... நடக்கத் தொடங்கினான். என்றாலும் அந்தக் கிளியும் அவனது கையோடேயே இருந்தது. சிறிது தூரம் நொண்டி, நொண்டி நடந்திருப்பான். அவ்விடத்தில் அதிர்ஷ்டவசமாகத் தனது நண்பர்களை மீண்டும் கண்டுவிட்டான். தான் வழி தவறிய விடயத்தையும், நடக்க முடியாமல் அவதிப்படுவதையும் பற்றிக் கூறினான் அவன்.

அவனைக் கைத்தாங்கலாக ஊருக்குள் அழைத்துச் சென்றனர் நண்பர்கள். ஊரிலுள்ள கை வைத்தியரிடம் அவனைக் கொண்டு சென்றபோது, சந்திரன் தன்னோடு அந்தக் கிளியையும் கொண்டு செல்லத் தவறவில்லை. சந்திரனின் காலுக்கு மருத்துவம் செய்ய ஆயத்தமான வைத்தியர் கிளியைப் பார்த்து இது ஏன் இப்படிப் பறக்கமுடியாமல் அவதிப்படுகின்றது எனக் கேட்டார். சந்திரன் நடந்தவற்றைக் கூறினான்.

அப்போது மருத்துவர் "பார்த்தாயா தம்பி.... நீ இந்தக் கிளியைத் தாக்கினாய்... அது பறக்க முடியாமல் அவதிப்பட்டது. இப்போது அதேபோல் நீ உனது காலில் காயப்பட்டு அவதிப்படுகின்றாய். உனக்காவது உதவுவதற்கு நண்பர்கள் இருந்தார்கள். ஆனால், வாய் பேச முடியாத இதற்கு யார் உதவப் போகிறார்கள்? நீ செய்த தவறை இனியாவது உணர்ந்து கொள்" என்றார்.

அப்போதுதான் சந்திரனுக்குத் தான் செய்த தவறு புரிந்தது. கிளிக்கும் மருத்துவம் செய்யுமாறு கூறி... அதனைப் பக்குவமாகக் காத்து அது சுகமடைந்தவுடன் அதன் போக்கில் அதனைப் பறக்கவிட்டான். அன்றிலிருந்து இவ்வாறு தீமைகள் செய்வதை அவன் நிறுத்திக் கொண்டான்.

**வாய்பேசாப் பிராணிகளுக்குத் தீங்கு செய்யும்போது அதே தீங்கு நம்மையும் தேடி வரும் என்பதை இக்கதை உணர்த்துகின்றதல்லவா?**


அங்.இல : 577
தி.கிந்துஜன், தரம் - 8B, மு/மாங்குளம் ம.வி, மாங்குளம்.


அங்.இல : 578
வை.நிசாந்தினி, தரம் - 12, யா/சாவகச்சேரி மகளிர் கல், சாவகச்சேரி.


அங்.இல : 579
பாத்திமா நுஸ்லியா, தரம் 6, அல்.அகீல் மு.ம.வி, கொட்டியாகுபுரம்.


அங்.இல : 580
எஸ்.கிசோ, தரம் - 6, புனித லூசியாள் ம.வி, கொட்டஞ்சேனை.



அங்.இல : 581
அ.அன்ரனி றெக்சன், தரம் 10B, வவுனியா த.ம.ம.வி, வவுனியா.


அங்.இல : 582
எம்.பாத்திமா அஸீமா, தரம் 9 தெஹி/கரகொ... மு.ம.வி, எட்டியாந்தோட்டை.

## விஜய் மாணவர் கழகம்


அங்.இல : 583
இ.ஸ்ரீ சாந்தி லதா, தரம் - 12A, கிளி/இந்துக் கல்லூரி, கிளிநொச்சி.


அங்.இல : 584
பா.சஜுதா, தரம் - 4, மட்/மெத்தைப்பள்ளி வித், மட்டக்களப்பு.


அங்.இல : 585
எஸ்.அஹமட் தில்ஷாத் அலி, தரம் - 7B, பது/அல் அதான் [illegible]


அங்.இல : 586
ஏ.எச்.அஸ்ரா ஹஸன், தரம் - 9, சித்தவெல்கால மு.வி, [illegible]


அங்.இல : 587
பி.றெபேக்கா, தரம் - 6A, எ.எக்ஸ்.ஜி.சி.தே.பாடசாலை, மன்னார்.


அங்.இல : 588
செ.கஜானன், தரம் - 6B, யா/உசன் இராமநாதன் ம.வி, மிருசுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ආයුබෝවන් ஆயுபோவன் வணக்கம்

பின்வரும் சொற்களின் உச்சரிப்பை அறிந்து கொள்ளுவோம்

## සාරි - சாறி - சாறி

| சொற்கள் | | உச்சரிப்பு | பொருள் |
|---|---|---|---|
| අඳින්න | | අඳින්න | உடுக்கு |
| | | அඳீன்ன | அணிய |
| | ඳ | சந்தி = ඳ | |
| | | අඳින්න | |
| කැමතියි | | කැමතියි | விரும்புவர் |
| | | කැ | விழைவர் |
| | කැ | Cat = කැ | |
| | ති | கத்தி = ති | |
| | | කැමතියි | |
| වර්ගයේ | | වර්ගයේ | இன |
| | | வர்ග யේ | பலவகை |
| | ග | Gum = ග | |
| | | වර්ගයේ | |
| තිබෙනවා | | තිබෙනවා | இருக்கின்றன |
| | | திබෙனவா | |
| | බෙ | Bed = බෙ | |
| | | තිබෙනවා | |
| ගමන් වලට | | ගමන්වලට | பயணங்கள் |
| | ග | ටமன்வலට | |
| | ග | Gum = ග | |
| | ට | பட்டம் = ට | |
| | | ගමන්වලට | |
| මගුල් | | මගුල් | விவாக |
| | | மගුல் | கலியாண |
| | ගු | சங்கு = ගු | |
| | | මගුල් | |
| අධික | | අධික | அதிக |
| | | அධික | |
| | ධි | சந்தி = ධි | |
| | | අධික | |





### சாறி பற்றிய சில வாக்கியங்கள்

1. කාන්තාවන් ලස්සන සාරි අඳින්න කැමතියි
   கான்தாவன் லஸ்ஸண சாறி அඳீன்ன கැமதிய்
   மகளிர் அழகான சாறி அணிய விரும்புவார்கள்
2. නොයෙක් පාට පාට සාරි කාන්තාවන් අඳිනවා
   நொயெக் பாට பாට சாறி கான்தாவன் அඳீனவா
   பல நிறச் சாறிகளை மகளிர் அணிவார்கள்
3. නොයෙක් වර්ගයේ සාරි තිබෙනවා
   நொயெக் வர்கயே சாறி திபெனவா
   பல வகையான சாறிகள் இருக்கின்றன
4. සාමාන්‍ය ගමන්වලට කාන්තාවන් මිල අඩු සාරි අඳිනවා
   சாமான்ய கமன்வலட கான்தாவன் மில அடு சாறி அඳீனவா
   பொதுப் பயணங்களின் போது இலாபமான சாறிகளை அணிவார்கள்
5. මගුල් වැනි උත්සවවලට මිල අධික සාරි අඳිනවා
   மගුள் වැனி உத்சவலට மில அධික சாறி அඳீனவா
   கலியாணம் போன்ற உற்சவங்களின் போது விலை உயர்ந்த சாரிகளை அணிவார்கள்
6. ඉන්දියාවේ කාංචිපුරම් සාරි ඉතා විශේෂයි
   இந்தியாவே காஞ்சிபுரம் சாறி இதா விஷேஸய்
   இந்தியக் காஞ்சிபுரச் சாறிகள் மிகப் புகழ் பெற்றவை




### வாசிப்பு - කියවීම



| | |
|---|---|
| ස | சா |

| | |
|---|---|
| සා | රි |
| சா | றி |



ලස්සන සාරි අඳින්න කාන්තාවන් කැමතියි
லஸ்ஸன சாறி அඳின்ன கான்தாவன் கැமதிய்




### අභ්‍යාසය பயிற்சி
### கீறிட்ட இடங்களை நிரப்புங்கள்

උදා ___රි
සාරි

1. සා ___
2 ලස්සන ___ අඳින්න කාන්තාවන් කැමතියි
3. නොයෙක් වර්ගයේ ___ තිබෙනවා
4. ___ සාරි ඉතා ලස්සනයි
5. උත්සවලට ___ සාරි අඳිනවා






*உங்கள் கடிதங்கள் சுருக்கமாகவும், விமர்சனப் பார்வையில் அமைந்ததாகவும், குறை நிறைகளைச் சுட்டிக் காட்டுபவையாகவும் இருக்க வேண்டுமென்றே விரும்புகிறோம்.*

ஆர்.

விஜய்க்கு கவிதை ஒன்றை அனுப்பி ஒரு வருடமாகிறது. இன்று வரை பிரசுரமாகவில்லை. என்றாவது பிரசுரிப்பீர்களா? அத்துடன் விஜய் பத்திரிகையின் அங்கத்தவர்களின் ஆக்கங்களை மாத்திரமா பிரசுரிக்கிறீர்கள்?

இஸட்.முஷ்ரிபா, களுத்துறை மு.பா.ம.வி.

உங்கள் ஆக்கங்கள் தரமானவையாக இருந்தால் நிச்சயம் பிரசுரமாகுமென்று பலமுறை இப்பகுதியில் சுட்டிக்காட்டியுள்ளோம். ஆக்கங்கள் அனுப்புவதற்கு அங்கத்தவர்களாக இருக்க வேண்டுமென்று கட்டாயமில்லை.

ஆர்.

2006.02.15 விஜய்யில் வெளியான எமது நாட்டின் மலை உச்சிகள் இப்போதும் வளர்ந்து வருகின்றன என்ற கட்டுரை புவியியல் பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. மேலும் விஜய்யில் வரும் அனைத்து விடயங்களும் சுப்பர்

ரா.கிருபைவாணி, அக்கரபத்தனை.

நான் கடந்த ஒரு வருடமாக விஜய்யைச் சுவைத்து வரும் வாசகி. விஜய்யில் வெளியாகும் நாடுகளில் எமது நாட்டைப் பற்றியும் பிரசுரித்தால் மிகவும் நன்றாக இருக்கும். மற்றும் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வாசகர் அறிவுப் போட்டியும் நன்றாக உள்ளது.

கா.கீர்த்தனா, திருகோணமலை.

விஜய்யில் வெளியாகும் அறிவியற் கலசம் மாணவர்களின் விஞ்ஞான அறிவை வளர்க்க மிகவும் உதவியாக உள்ளது.

முஜாஸ், கஜுவத்தை.

'விஜய்'யில் வெளிவரும் அனைத்து விடயங்களும் பயனுள்ளதாகவும் அறிவுக்கு விருந்தாகவும் அமைகின்றன. இன்னும் பல விடயங்களைக் கொண்டு விஜய் வளம் பெற வாழ்த்துகிறேன்.

எம்.எஸ்.சபானா, குருநாகல்.

விஜய்யில் வெளிவரும் விடயங்கள் மிகவும் நன்றாகவும், பயனுள்ளதாகவும் இருக்கின்றன. விளையாட்டுச் செய்தியையும் கொஞ்சம் விரிவாக்கினால் பயனுள்ளதாக இருக்கும்.



எம்.எல்.எம்.சித்திக், காவத்தமுனை.

'அதிசய வனம்' வாசிக்க வாசிக்க வியப்பாகவும், சுவாரசியமாகவும் இருந்தது. அருமையான கதை, அழகான சித்திரங்கள். பாராட்டுக்கள்.

கே.ஹஸ்ஸானா, குருநாகல்.

'விஜய்' எனும் பூங்காவில் வெளிவரும் அனைத்து அம்சங்களும் பயனுள்ளதாக இருக்கின்றன. உன் புகழ் மேலும் மேலும் வளம் பெற வாழ்த்துகிறேன்.



வி.கலைமதி, குருநாகல்.

'விஜய்' பலருக்கும் பல வழிகளில் பலன் அளிக்கிறது. 'விஜய்' பத்திரிகையில் வெளியாகும் அனைத்து அம்சங்களும் சிறந்தவையாகவும், எம்மைப் போன்ற மாணவ மணிகளுக்கு ஓர் ஊன்றுகோலாகவும் இருக்கிறது இப்பத்திரிகை.

எம்.கலாதேவி, மத்துகமை.

அறிவு வளர்ச்சிக்கு அரும்பணியாற்றும் விஜயே! உன் அரும்பணி மென்மேலும் வளர்ந்து உயர்ந்த இடத்தை அடைய எனது வாழ்த்துக்கள்

எஸ்.சுதர்ஷன், புலத்கொகுபிட்டிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்
அற்லஸ்




# அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்குச் சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாகச் சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

## கடும்புயல்

பங்களாதேஷின் 'கந்தர் பான்ஸ்' என்ற பிரதேசத்தில் மார்ச் 4 ஆம் திகதியன்று கடும் புயற்காற்று வீசியதில் 4 பேர் மரணமடைந்ததோடு, 100 பேர் காயங்களுக்குள்ளாகினர். 6 கிராமங்களில் மொத்தம் 500 வீடுகள் முழுமையாகச் சேதமுற்றன. காயமுற்ற பலர் இரண்டு மருத்தவமனைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

## எதிர்ப்பு ஊர்வலம்!

தாய்லாந்தின் பிரதமர் தக்ஸின் சிவைத் ராவை பதவி விலகுமாறு கோரி பெங்கொக் நகரில் எதிர்ப்பு ஊர்வலமொன்று நடைபெற்றது. இந்த ஊர்வலத்தில் சுமார் 50,000 பொதுமக்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இதனையடுத்துப் பிரதமர் நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளதையடுத்து ஏப்ரல் 2 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், பிரதமர் தக்ஸினுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்தும் இடம் பெற்று வருவதாகக் கூறப்படுகின்றது.

## போலந்திலும் பறவைக் காய்ச்சல்!

ஐரோப்பாவிலும் பரவி வருகின்ற பறவைக் காய்ச்சலானது போலந்து நாட்டிலும் பரவியிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. போலந்தின் 'விஸ்டுலா' என்ற கங்கைக் கரையில் இரண்டு அன்னப் பறவைகள் இறந்து கிடக்கக் காணப்பட்டதில், அவற்றைப் பரிசோதித்துப் பார்த்தபோது அவை பறவைக் காய்ச்சலின் மூலம் இறந்திருக்கலாம் என ஆரம்பக் கட்டச் சோதனைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

## கோபி அனான் கவலை!

ஐக்கிய நாடுகள் சபையில் 'மனித உரிமைகளைக் காக்கும் பிரிவு' என்றவோர் தனிப்பட்ட பிரிவு ஏற்படுத்தப்படுவதை அமெரிக்கா எதிர்த்துள்ளது.

இவ்வாறு அமெரிக்கா தீர்ப்புத் தெரிவித்துள்ளமைக்கு ஐ.நா செயலாளர் கொபி அனான் கவலை வெளியிட்டுள்ளார். உலகளாவிய ரீதியில் பல மனித உரிமை மீறல் சம்பவங்கள் நடைபெற்று வருகின்ற ஒரு நிலையில் இத்தகையதோர் பிரிவு அத்தியாவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# புஷ்ஷின் தெற்காசிய விஜயம்



சில தினங்களுக்கு முன்னர் தெற்காசிய நாடுகளுக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்-ஆப்கானிஸ்தான், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்திருந்தார். இப்பயணங்களின் போது இந்தியா, ஆப்கானிஸ்தான் நாடுகளில் மேற்கொண்ட விஜயமானது முக்கியத்துவம் வாய்ந்த விஜயமாகக் கருதப்படுகின்றது.

இந்தியாவில் மேற்கொண்ட விஜயத்தின் போது அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்குமிடையிலான அணுசக்தி உடன்பாடொன்று ஏற்படுத்தப்பட்டது. இதன் பின்னர் ஹைதராபாத் பிராந்தியத்திற்கும் புஷ் விஜயம் செய்தார். ஹைதராபாத் விஜயத்தின் போது, அங்குள்ள முஸ்லிம் மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் பலூன்களிலும், பட்டங்களிலும் புஷ்ஷிற்கு எதிரான சுலோகங்களைத் தொங்கவிட்டு வானில் பறக்க விடுவதற்கும் உத்தேசித்திருந்ததாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அப்பகுதிகளில் பலூன், பட்டம் ஆகியவற்றைப் பறக்க விடுவதற்குப் பொலிஸார் தடை விதித்தனர்.

இந்திய விஜயத்தை முடித்துக் கொண்ட புஷ் அங்கிருந்து பாகிஸ்தானுக்கான விஜயத்தை மேற்கொண்டார். எனினும், பாகிஸ்தானுக்கான விஜயமானது வரலாற்று முக்கியத்தும் மிக்க தீர்மானங்கள் எதனையும் ஏற்படுத்தவில்லை எனப் பாகிஸ்தானிய எதிர்கட்சிகள் அதிருப்தியை வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஒஸ்கார் விருது!



'ஒஸ்கார்' விருது வழங்கும் விழா சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது. 78 ஆவது தடவையாக நடைபெற்ற மேற்படி ஒஸ்கார் விருது விழாவில் சிறந்த இயக்குனர் விருது தாய்வானைச் சேர்ந்த ஆங்லீ என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இவ்விருதினைப் பெறும் முதலாவது ஆசிய நாட்டவர் என்ற பெருமையையும் இவர் பெறுகின்றார்.

'புரோக் பெக் மவுண்டன்' என்ற திரைப்படத்தைச் சிறப்பாக இயக்கியமைக்காகவே ஆங்லீக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், இத்திரைப்படமானது சிறந்த திரைப்படமாகத் தெரிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

'கிறாஷ்' என்ற திரைப்படத்திற்குச் சிறந்த திரைப்படத்திற்கான விருது வழங்கப்பட்டுள்ளது. 'கிறாஷ்' படத்திற்கும் 'புரோக் பேக் மவுண்டன்' படத்திற்குமிடையே சம அளவிலான போட்டி நிலவிய போதிலும் தேசியத்துவத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்ததன் பேரிலேயே 'கிறாஷ்' திரைப்படம் சிறந்த திரைப்படமாகத் தெரிவு செய்யப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.



# கூட்டுப்படைகளின் வாபஸ்



ஈராக்கில் நிலை கொண்டுள்ள அமெரிக்கா தலைமையிலான கூட்டு இராணுவத்தினர் 2007 ஆம் ஆண்டிலேயே அங்கிருந்து வாபஸ் பெறப்படுபவர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 2003 ஆம் ஆண்டில் ஈராக்கின் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த சதாம் ஹுசைனின் ஆட்சியை அதிரடி நடவடிக்கையின் மூலம் வீழ்ச்சியுறச் செய்த கூட்டுப் படையினர், தற்போது இரண்டு வருடங்கள் கழிந்துள்ள நிலையிலும் தொடர்ந்தும் அங்கேயே நிலை கொண்டுள்ளனர்.

ஈராக்கில் தற்போது 1,35,000 அமெரிக்கப் படையினர் மற்றும் பிரித்தானியப் படையினர் 8,500 என இதர சில நாடுகளையும் சேர்த்து ஒட்டு மொத்தமாக 1,60,000 கூட்டு இராணுவத்தினர் ஈராக்கில் உள்ளனர். இவ்வாறு கூட்டு இராணுவத்தினர் தொடர்ந்தும் ஈராக்கில் நிலை கொண்டிருப்பதையிட்டுச் சர்வதேச அளவிலான எதிர்ப்பலைகள் இப்போதும் இருந்தே வருகின்றது. இத்தகைய ஒரு பின்னணியிலேயே 2007 ஆம் ஆண்டில் கூட்டுப் படையினர் ஈராக்கிலிருந்து வாபஸ் பெறப்படுவர் என்ற தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அற்லஸ் கேள்வி - 39

**கேள்வி: தாய்லாந்தில் எப்போது தேர்தல் நடைபெறவுள்ளது?**

சரியான விடை :..........................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 39,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 37 இன் சரியான விடை :- அமெரிக்கா**

**பரிசு பெறுவோர்**

தௌபீக் முகமட் பாஹிட், தரம் - 9[B],
தி/கிண்ணியா மத்திய கல்லூரி, திருகோணமலை.

துளசிகா சிவம், தரம் - 8[A],
சிவப்பிரகாச ம.வி, சங்கானை, யாழ்ப்பாணம்.

ஆர்.சுமித்ரா, தரம் - 11[A],
இ/காவத்தை தமிழ் ம.வி, காவத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மர்ம தேசத்தில்...

ஈழப்பெருஞ்சித்தன்

நாகனுக்கு உடனே நித்திரை வரவில்லை. அவன் மௌனமாக வானத்து நட்சத்திரங்களை உற்றுப் பார்த்து அதற்கப்பால் ஏதாவது தெரிகிறதா? என்று அவதானித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு நட்சத்திரங்கள் என்றால் மிகப் பிடிக்கும். இரவில் துணையற்ற வழிப்போக்கர்களுக்கு நட்சத்திரங்களே நல்ல நண்பர்கள் என்று யாரோ முன்பு கூறியமை அவனுக்கு ஞாபகத்துக்கு வந்தது. உண்மைதான் என்று நினைத்துக் கொண்டான்.

அப்போது ஒரு வயதான விறகு வெட்டி கையில் கோடரியுடனும் தோளில் கட்டு விறகுடனும் அவ்விடத்துக்கு வந்தான். நாகன் அவ்விடத்தில் படுத்திருப்பது கண்டு திகைத்து, அவ்விடத்தில் தனியாகப் படுத்திருக்கும் அவன் துணிச்சலை வியந்தான்.

'சுவாமி..... இவ்விடம் மனித சஞ்சாரத்துக்கு உகந்ததல்ல. பேய், பிசாசு, ஆவி, பூதம், காத்து, கறுப்பு எனப் பலவும் உலாவும் இடம் இது. என்னுடன் வாருங்கள்' என்று அவனை அழைத்தான்.

அதைக் கேட்டு நாகன் சிரித்தான். 'எனக்குப் பேய் பிசாசு, ரத்தக் காட்டேரிகள் உலாவும் இடமென்றால் ரொம்பப் பிடிக்கும். அத்தகைய இடங்களில் தங்கி வீரசாகசங்கள் செய்து பழக்கமுண்டு. நான் ஒருபோதும் உயிருக்குப் பயந்தவன் அல்ல' என்றான்.

நாகன் 'எனக்குப் பேய் பிசாசு, ரத்தக் காட்டேரிகள் உலாவும் இடமென்றால் ரொம்பப் பிடிக்கும். அத்தகைய இடங்களில் தங்கி வீரசாகசங்கள் செய்து பழக்கமுண்டு. நான் ஒருபோதும் உயிருக்குப் பயந்தவன் அல்ல' என்றான்.



எனினும், அந்த விறகுவெட்டி விடுவதாக இல்லை. 'இந்த இடம் பிசாசுகளின் குற்றச் செயல்கள் நிறைய இடம்பெற்ற இடம். அதனால் இவ்விடத்துக்கு மர்மதேசம் என்ற பெயரும் உண்டு. நீங்கள் எவ்வளவுதான் துணிச்சலான துறவியாக இருந்தாலும் ஏன் இந்த அபாயகரமான இடத்தில் தங்கவேண்டும். எனது வீடு இன்னும் கொஞ்சத் தூரத்தில்தான் இருக்கிறது. என்னால் உணவளித்து உங்களை உபசரிக்க முடியாதென்றாலும் படுத்து உறங்க ஒரு பாதுகாப்பான இடம் தரமுடியும்' என்றான் மிக வினயமாக.

நாகன் அவ்விறகுவெட்டியின், அந்த அடக்கவொடுக்கத்தால் மிகக் கவரப்பட்டான். அவன் குரலில் அப்படி ஒரு பணிவு காணப்பட்டது. நாகன் அவனுடன் செல்வதென்று தீர்மானித்தான்.

அந்த விறகுவெட்டி காடு மேடுகளையெல்லாம் தாண்டி அவனை அழைத்துச் சென்றான். அந்தப் பாதை அவன் எதிர்ப் பார்த்ததை விடக் கரடுமுரடானதாக இருந்தது. வழுக்கும் பாறைகள், பாய்ந்து தாண்டவேண்டிய பள்ளத்தாக்குகள், செங்குத்தான புதர்கள், பற்றைகள் முதலானவற்றைத் தாண்டிச் செல்லவேண்டியிருந்தது. அந்த விறகுவெட்டி சாமான்யமானவன் அல்ல என்று நினைத்தான் நாகன்.

இறுதியாக அவர்கள் ஒரு சமவெளியை அடைந்தார்கள். அதனைச் சுற்றி ஒரு சிறு குன்று வானத்தை நோக்கி உயர்ந்திருந்தது. நல்ல நிலாவொளி வீசியதால், அக்குன்று பூதம் ஒன்று எழுந்து நிற்பதைப் போல் தோற்றம் தந்தது. அக்குன்றை நெருங்கியதும் அக்குன்றின் அடிவாரத்தில் பனை ஓலையால் கூரை வேயப்பட்ட குடிசை ஒன்று காணப்பட்டது.

குடிசையின் உள்ளிருந்து பிரகாசமான வெளிச்சம் வீசிக் கொண்டிருந்தது. விறகுவெட்டி நாகனைக் குடிசையின் பின்புறம் அழைத்துச் சென்றான். அங்கே தோன்றிய காட்சி நாகனைப் பிரமிக்கச் செய்தது.

குடிசைக்குப் பின்புறம் அடர்ந்த காய்கறித்தோட்டம் விசாலித்திருந்தது. அதற்கப்பால் சலசலத்தோடும் மலையருவி குன்றிலிருந்து கீழிறங்கி ஓடிக் கொண்டிருந்தது. ஒரு பெண் வெண் பட்டாடை உடுத்தியிருந்தது போல் இருந்தது. அங்கே அருவியில் இருந்து பிடிக்கப்பட்ட நீர் வரிசையாக இருந்த பீப்பாய்களின் நிரப்பப்பட்டிருந்தது.

நாகனும் விறகுவெட்டியும் கை, வாய், கால், முகங்கழுவிக் கொண்டனர். விறகு வெட்டி நாகனை மிகப் பணிவுடன் வீட்டுக்கு வருமாறு அழைத்தான். நாகனும் எதுவிதத் தயக்கமுமின்றி உள்ளே நுழைந்தான்.

உள்ளே அவன் பார்த்த காட்சி அவன் திகைப்பை மேலும் அதிகரிக்கச் செய்தது. அங்கே கொழுந்து விட்டெரியும் தீயைச் சுற்றி நான்கு உருவங்கள் அமர்ந்திருந்தன.

(தொடரும்......)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "விஜய்" இளம் செய்தியாளர்கள்


மாயழகு கோகிலதீபன், லக்ஷபான, மஸ்கெலியா.


அபர்ணா ஸ்ரீவரத்தினம், எழுதுமட்டுவாள் தெற்கு, சாவகச்சேரி.


கி.மு.நிகாஷ் அஹமட், அக்கரைப்பற்று.


இராமநாதன் ஸுகந்தன், கல்லடி, மட்டக்களப்பு.


மொஹமட் ஸமூன் பாதிமாரிஸ்னா, மதுருபிட்டிய, அல்கம.


மீரான் அஸ்மிலா, இக்கிரிகொல்லாவ, அநுராதபுரம்.


கணபதிப்பிள்ளை தர்ஜனன், புலோலி தெற்கு, பருத்தித்துறை.


பிரவீனா ரவீந்திரன், திருகோணமலை.


ஆர்.கங்காதரன், மாக்கும்புர, நாவலப்பிட்டி.


அஹமட் அஜ்மல், அட்டுலுகம, பண்டாரகம.


ஐ.எப்.இல்முனிஸா, இனிகலை, கட்டுகஸ்தோட்டை.



வஹாப் வஜிஹாஸ் பொத்துவில்.


நிரோஷா துரைசிங்கம், சின்னப் புதுக்குளம், வவுனியா.


எம்.எச்.எம்.ஆஷிக் அலி, பதுளைப்பிட்டி, பதுளை.


மணிவாசகம் பிரசன்யா, பேலியகொட.


# வெளிவந்துவிட்டது.!!!




இலங்கையின் ஒரேயொரு மாதாந்த தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

தமிழ் PCTIMES
தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

௨006 மார்ச் முதல் மாதாந்தம் வெளிவருகிறது.

**இலங்கையின் சகல பாகங்களிலும் கிடைக்கும் !**

புதிய

- தகவல்கள்
- செய்திகள்
- மென்பொருள் (SoftWare)
- வன்பொருள் (HardWare)
- செய்முறைகள்
- செயற்பாடுகள்

இன்னும் பல சுவையான அம்சங்களுடன்...

wijeya newspapers

விஜய் பதிப்பகத்தாரின் மற்றுமோர் வெளியீடு.

SunHiaon, 2006


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துடுப்பாட்டத் தரப்படுத்தல்

| வீரர் | நாடு | புள்ளிகள் |
|---|---|---|
| 1. ரிக்கிபொன்டிங் | அவுஸ்திரேலியா | 922 |
| 2. ஜெக்கெலிஸ் | அவுஸ்திரேலியா | 888 |
| 3. பிரயன் லாரா | மே.இ.தீவுகள் | 874 |
| 4. மெத்தீவ்ஹேடன் | அவுஸ்திரேலியா | 858 |
| 5. இம்சமாம்உல்ஹக் | பாகிஸ்தான் | 857 |

## பந்து வீச்சாளர் தரப்படுத்தல்

| வீரர் | நாடு | புள்ளிகள் |
|---|---|---|
| 1. முரளிதரன் | இலங்கை | 855 |
| 2. மெக்ராத் | அவுஸ்திரேலியா | 853 |
| 3. ஷேன்வோர்ன் | அவுஸ்திரேலியா | 842 |
| 4. மெத்யூ ஹொகாட் | இங்கிலாந்து | 779 |
| 5. மக்காயா நிட்னி | தெ.ஆபிரிக்கா | 778 |



# மீண்டும் சாதனையில்!

இலங்கை அணியின் சுழல் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் பங்களாதேஷ் அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் 9 விக்கெட்களைப் பெற்றமையின் மூலம் உலகப் பந்து வீச்சாளர்களின் தரப்படுத்தல் பட்டியலில் அவுஸ்திரேலிய வீரர் மெக்ராத்தைப் பின்தள்ளி முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

இதன்படி 101 டெஸ்ட் போட்டிகளில் போட்டியிட்டு மொத்தம் 598 விக்கெட்களைப் பெற்றே முரளிதரன் இவ்வாறு முதலிடத்தைப் பெற்றுள்ளார். அது மட்டுமன்றி பங்களாதேஷுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியினில் ஒரே இன்னிங்ஸில் 5 விக்கட்களைப் பெற்றமையின் மூலம் மற்றுமோர் சாதனையையும் முரளி நிகழ்த்திவிட்டார். அதாவது ஒரே இன்னிங்ஸில் 5 விக்கெட் களை 50 தடவைகள் இவ்வாறு முரளி பெற்றதன் மூலம் அதுவும் ஓர் உலக சாதனையாக பதியப்பட்டுவிட்டது. ஆரம்ப கணக்கின் படி 598 டெஸ்ட் விக்கெட்களைப் பெற்றிருந்த முரளி பங்களாதேஷுடனான இரண்டாவது இன்னிங்ஸில் மேலும் 2 விக்கெட்டுக்களைப் பெற்று 600 ஐ எட்டினால் உலகிலேயே 600 விக்கெட்களைப் பெற்ற இரண்டாவது வீரர் என்ற சாதனையையும் நிகழ்த்தியவராவார்.

# பந்தினால் நடுவரைத் தாக்கிய வீரர்

அகில இலங்கை கழக மட்டத்திலான கிரிக்கெட் போட்டியொன்றின்போது கிரிக்கெட் வீரர்கள் சிலரால் அச்சுறுத்தப்பட்டுத் தாக்கப்பட்ட நடுவர் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் மொரட்டுவை விளையாட்டரங்கிலேயே நடைபெற்றது. பாணந்துறை விளையாட்டுக் கழகத்திற்கும் செபஸ்தியனைட்ஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையிலான போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டத்தின் போது பாணந்துறை கழகத்தின் வீரர்கள் தன்னைத் தாக்கியதாக நடுவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

பாணந்துறை விளையாட்டுக் கழகத்தின் துடுப்பாட்ட வீரரின் துடுப்பு மட்டை விக்கெட்டில் பட்டதன் காரணமாக அவர் ஆட்டமிழந்து விட்டதாக நடுவர் ரோஹித்த காட்டாச்சி தீர்ப்பு வழங்கியுள்ளார். இதனை ஏற்க மறுத்த மேற்படி அணியின் இரண்டு வீரர்கள் ஆடுகளத்திற்குள் வந்து சுமார் 10 நிமிடங்களாக நடுவரை அச்சுறுத்தியுள்ளனர். பின்னர் தேநீர் இடைவேளையின் போது மீண்டும் பாணந்துறை கழகத்தின் நான்கு வீரர்களும், அதன் அதிகாரியொருவரும் இதே நடுவரை அச்சுறுத்தியவேளை இவர்களில் ஒருவர் தனது கையிலிருந்த பந்தினை வீசி நடுவரைத் தாக்கியுள்ளார். இதனால் போட்டி 80 நிமிடங்களுக்குத் தடைப்பட்டது.


இதன் பின்னர் பதில் நடுவர் ஒருவர் நடுவராகக் கடமையாற்றிய அதேவேளை, தாக்கப்பட்ட நடுவர் மருத்துவமனைக்குக் கொண்டச் செல்லப்பட்டார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக இலங்கைக் கிரிக்கெட் சபையிடமும், நடுவர்கள் சங்கத்திடமும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது குறித்தான தீர்க்கமான முடிவு கிட்டும் வரையில் அடையாள எதிர்ப்பைத் தெரிவிக்குமுகமாகப் இனிவரும் போட்டிகளில் நடுவர்கள் தமது கையில் கறுப்புப் பட்டியை அணிந்து கொண்டு பணியாற்றுவதென முடிவெடுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

# பாகிஸ்தான் அணிக்குப் பந்துவீச்சுப் பயிற்சிக்கு வக்கார் யூனூஸ்

ஸ்போர்ட்ஸ்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர்களுக்கான பயிற்றுனராக முன்னாள் வீரரான வக்கார் யூனூஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

சமீப நாட்களாகப் பாகிஸ்தான் அணியில் வேகப்பந்து வீச்சாளர்களின் திறன், சரிவு நிலையிலேயே இருந்து வருகின்றது. ஷொஹப் அக்தாரைத் தவிர வேறு வீரர்கள் எவரும் அதிகளவில் வேகப்பந்து வீச்சில் மிளிரவில்லை. எனவே, எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டும், இளம் வீரர்களுக்கு வாய்ப்பைக் கொடுக்கவேண்டும் என்ற திட்டத்தின் கீழும் அதனைச் சரிவர நடைமுறைப் படுத்துவதற்காகவுமே வக்கார் யூனூஸ் இவ்வாறு பயிற்றுனராக நியமிக்கப்பட்டுள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

சமீப காலங்களாகப் பாகிஸ்தான் அணி கலந்து கொண்ட போட்டிகளில் அவ்வணி பாரிய அளவில் பிரகாசிக்கவில்லை. அணியில் போதிய வேகப்பந்து வீச்சாளர்கள் இல்லாத குறையே இதற்குக் காரணம் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது. எனவே, வக்கார் யூனூஸின் பயிற்றுவிப்பின் பின்னர் பாகிஸ்தான் அணியின் பலம் பெருகலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# இலங்கை 'ஏ' அணியின் பங்களாதேஷ் விஜயம்!

மார்ச் 23ம் திகதி பங்களாதேஷில் இலங்கை 'ஏ' அணிக்கும் பங்களாதேஷ் 'ஏ' அணிக்குமிடையே கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன.

நான்கு நாள் போட்டிகள் இரண்டும் ஒருநாள் போட்டிகள் மூன்றும் இப்போட்டித் தொடரில் இடம்பெறும்.

இப்போட்டிகளுக்கென 15 பேரை உள்ளடக்கிய இலங்கை 'ஏ' அணி ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டு விட்டது.

இலங்கை 'ஏ' அணியின் தலைவராக ஜெஹான் முபாரக்கும் உப தலைவராக மலிந்த கஜநாயக்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன்படி முதலாவது நான்கு நாள் போட்டி மார்ச் 23 ஆம் திகதி டாக்காவிலும் முதலாவது ஒருநாள் போட்டி ஏப்ரல் 4 ஆம் திகதி 'போக்ரஹ' என்ற இடத்திலும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



பேருவளை பூந்தோட்டத்தில் சமீபத்தில் நடைபெற்ற 5வது வருட 'கல்வி வழிகாட்டல்' நிகழ்வின்போது, மாணவி ஸில்மியா பரிசு பெறுகிறார்.



கொழும்பு சேர் ராஸிக் ஃபரீட் முஸ்லிம் வித்தியாலயத்தில் சமீபத்தில் நடைபெற்ற மாணவ தலைவர்களுக்கான தினத்தன்று அதிபர், ஆசிரியருடன் மாணவத் தலைவர்கள் நிற்கின்றனர்.

## ''இனிமை பூத்த தமிழ் மொழி''

அகிலம் போற்றும் நல்ல மொழி
அகரம் ஆதியாய்க் கொண்ட மொழி
மகிழ்ந்தே பாவலர் போற்றும் மொழி
மூவகை அழகு நிறைந்த மொழி!

கல்லது தோன்றாக் கால மொழி
கவினார் சங்கம் கண்ட மொழி
பல்வகை இலக்கணம் பெற்ற மொழி
இராமாயண பாரதம் படைத்த மொழி!

குடிமக்கள் காப்பியம் சொன்ன மொழி
குமரன் முருகன் காத்த மொழி
முடிமன்னர் மூவர் வளர்த்த மொழி
வள்ளுவன் குரலில் ஒலித்த மொழி!


செந்தமிழ் மக்கள் பேசும் மொழி
சிறப்புறப் பாடல்கள் கொண்ட மொழி
இந்த மண்ணில் காணும் மொழி
இனிமை பூத்த தமிழ் மொழி!

அரியாலையூர் சி.சிவதாசன்.

## கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



வி.சரவணகுமார், தரம் $10^{C}$,
க/இந்து தேசிய கல்லூரி,
புசல்லாவ.



ஏ.எச்.எஸ்.முன்சிபா, தரம் - 4,
அல் முபாரக் தே.கல்,
மல்வானை.



பி.பிரகதீஸ், தரம் - 2,
வெஸ்லி கல்லூரி,
கொழும்பு - 9.





ப.பஹத், தரம் - $9^{A}$,
க/மதீனா தேசிய பாடசாலை,
மடவளை.



ம.கீர்த்திகன், தரம் - $8^{A}$,
யா/கொக்குவில் இ.கல்,
யாழ்ப்பாணம்.



ப.தார்மிகன், தரம் - $9^{A}$,
யா/ஆவரங்கால் நடராஜா
இராமலிங்க வித், யாழ்ப்பாணம்.



கிருஷ்ணமூர்த்தி கபிலன்,
தரம் $7^{A}$,
விபுலானந்த மத்திய கல்லூரி,
காரைதீவு.



எம்.ஆர்.எம்.ரிஹான், தரம் - $5^{B}$,
ஜீலான் ம.கல்.,
ஹேனமுல்ல, பாணந்துறை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 குறுக்கெழுத்துப் போட்டி. இல.54

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 ர | 4 | ■ |
| | ■ | 5 | | | 6 |
| 7 | ங் | | | | |
| | ■ | 8 | | சு | ■ |
| ■ | 9 | ■ | | ■ | 10 |
| 11 | | | ■ | 12 | |

### மேலிருந்து கீழ்

1. தென் அமெரிக்காவின் மிக நீளமான நதி.
2. காடு.
3. மனதிற்கு மகிழ்ச்சி தருவதை குறிக்கும் ஒரு சொல்.
4. இது சுகம் தருமாம். (குழம்பி)
6. இராவணனால் கடத்திச் செல்லப்பட்டுச் சிறை வைக்கப்பட்டவர்.
9. பெண் பறவையைக் குறிக்கும். 10. நோய்.

### இடமிருந்து வலம்

1. திருக்குறளில் இதுவொன்றில் 10 குறள்கள் உள்ளன.
5. வரதட்சணை (குழம்பி)
7. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வெள்ளரச மரக்கிளையைக் கொண்டு வந்தவர்.
8. தானே செய்வதைக் குறிக்கும். (குழம்பி)
11. சிறிதானாலும் காரம் பெரிதென்பர்.
12. தமிழ் மாதங்களில் ஒன்று.

குறுக்கெழுத்துப் போட்டி -54
"விஜய்" த.பெ.எண். 2037 கொழும்பு

### போட்டி. இல - 52இன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 போ | 2 த | ம் | ■ | 3 கொ | 4 டி |
| 5 யா | ன் | ■ | 6 அ | ல | கு |
| ■ | 7 மை | 8 ல் | க | ல் | ■ |
| 9 பா | ■ | 10 அ | வு | ன் | 11 ஸ் |
| 12 மா | நி | ல | ம் | ■ | தி |
| லை | ■ | ல் | ■ | 13 பா | ரி |

**பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்**

ஆர்.ஷாருணி, தரம் - 11,
பது/தமிழ் ம.ம.வி, பதுளை.

எம்.எஃப்.எம்.நிம்சாத், தரம் - 12,
தாருல் உலூம் ம.வி, மாத்தறை.

வி.வதனராஜ், தரம் - 8A,
இந்துக் கல்லூரி, திருமலை.

பெயர் :- ....................................

நிரந்தர முகவரி:- ....................................


....................................

பாடசாலை, தரம், முகவரி :- ....................................


....................................

நகரம் : .................... மாவட்டம் :....................

## 1 ஆரம்பத்திலிருந்து முடிவு வரை A, B, C, D என ஒழுங்குபடுத்தி எழுதுக.



## 2 வித்தியாசங்களில் √ அடையாளமிடுக.



## 3 கணக்குப் புதிர்

1. இறப்பர் காணியொன்றில் ஒரு வரிசையில் 14 இறப்பர் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இரண்டு மரங்களுக்கிடையிலுள்ள தூரம் 20 மீற்றராகும். முதலாவது மரக்கன்றுக்கும் கடைசியாக நடப்பட்டுள்ள மரக்கன்றுக்கும் இடையிலான தூரம் எத்தனை மீற்றர்? ....................
2. ஒவ்வொரு 400 கிராம் நிறையுள்ள 80 பால்மா பைக்கற்றுக்கள் 6 கி.கிராம் நிறைகொண்ட ஒரு பெட்டியில் அடைக்கப்பட்டன. தற்போது பெட்டியின் மொத்த நிறை என்ன? .
....................
3. ஒரு பெட்டியில் 120 மாம்பழங்கள் வீதம் கொண்ட 3 பெட்டிகள் உள்ளன. பெட்டிகளிலுள்ள ஒவ்வொரு டசினிலும் 9 பழங்கள் நல்லவை. அழுகிய பழங்களின் எண்ணிக்கை யாது?
....................

## 4 பின்வரும் தமிழ்க் கூட்டப் பெயருக்குப் பொருந்தும் ஆங்கிலக் கூட்டப் பெயரின் கீழ் கீறிடுக.

1. பாடகர்களின் கூட்டம்
   - a band of musicians
   - a group of musicians
   - a fleet of musicians
2. கற்குவியல்
   - a pile of stones
   - a heap of stones
   - a stack of stones
3. படிக்கட்டுகள்
   - a range of steps
   - a flight of steps
   - a balustrade of steps
4. புத்தக அடுக்கு
   - a pack of books
   - a budget of books
   - a pile of books
5. நிகழ்ச்சித் தொடர்
   - a series of programmes
   - a series of events
   - a schedule of programmes
6. செம்மறி ஆட்டு மந்தை
   - a flock of sheep
   - a flight of sheep
   - a flight of ship




1, 2, 3, 4 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் உறையிலும் 5ம் இலக்க குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடையை தபால் அட்டையிலும் ஒட்டி கீழுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து 2006.03.21ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 43**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## அறிவுக்கு விருந்து - 40 விடைகள்

**போட்டி : 01**

| | | | | |
|---|---|---|---|---|
| சமையல் முறை | - Cuisine | அ. | Newspaper | - நாளிதழ் |
| தானிய வகைகள் | - Millet | ஆ. | Blacksmith | - கொல்லன் |
| மனோதத்துவவியல் | - Psychology | இ. | Dry leaf | - சருகு |
| நாடு பெயர்ந்து குடியேறுபவர் | - Migrant | ஈ. | Vow | - சூளுரை |
| ஒற்றைத் தலைவலி | - Migraine | உ. | Bangle | - வளையல் |

**போட்டி : 02**

1. அன்று மாலை ஒற்றையடிப் பாதையினூடாகத் தனியே வந்து கொண்டிருந்தேன்.
2. அப்போது பாதையோரமாக இருந்த புதருக்குள் வித்தியாசமாக ஏதோ மின்னுவதைக் கண்டேன்.
3. புதருக்கு அருகில் சென்றேன்.
4. அங்கே வெள்ளி நிறத்தில் அழகிய பெட்டி ஒன்று இருந்தது.
5. அதைக் கையிலெடுக்க முற்பட்டேன்.
6. திடீரென 'என்னைத் தொடாதே! தொட்டால் உனக்கு ஆபத்து!' என்றொரு குரல் என்னை எச்சரித்தது.
7. நான் அதைக் கவனிக்காமல் பெட்டியை வெளியே எடுத்து திறந்தது தான் தாமதம்.
8. பெட்டிக்குள்ளிருந்து பெரியதொரு பூதம் உறுமிக் கொண்டு வெளியே வந்தது.

**போட்டி : 03**

1) 3, 6, 10 2) 37 3) 17 முக்கோணிகள் உள்ளன.


**போட்டி : 04**

ஒரே மாதிரியான உருக்கள் 2 உள்ளன.

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 40 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி : 01 | போட்டி : 02 | போட்டி : 03 | போட்டி : 04 | போட்டி : 05 (குறு.போட்டி-52) |
|---|---|---|---|---|
| நிலேந் செல்வராஜா, தரம் - 9ST, புனித சூசையப்பர் கல்., கொழும்பு 10. | த.இளங்கோவன், தரம் - 11B, நு/பரிசுத்த திருத்துவ ம.கல்., ஆவளலிய. | எம்.ஜே.எஃப்.நஸ்ஹத், தரம் - 9, அல்-ஹஸன் வித்., வேவல்தெனிய. | ந.உஷா, தரம் - 4A, யா/நாவந்துறை றோ.க.த.க., நாவந்துறை. | ஏ.சுதார்த்தன், தரம் - 7A, மொராயா த.வி, மொராயா. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வரலாற்றிலிருந்து..

# கண்டிக் கலவரம்

அத்தியாயம் 32

எழுதுபவர் : திலகன்
சித்திரம் : அப்பயன்



**1** யாழ்ப்பாணத்திலிருந்த சூசா கண்டிக்குத் திரும்பவும் செல்லப் பலரைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு கண்டிக்குப் புறப்பட ஆயத்தம் செய்தான். யாழ்ப்பாணத்திலிருந்து கண்டிக்குச் செல்வதென்பது மிகவும் சிரமமான விடயமாக இருந்தது. ஆனாலும் மலைகள், பள்ளத்தாக்குகள் மற்றும் காடுகள் என்பவற்றைக் கடந்து பல நாட்களின் பின் கண்டியை வந்தடைந்தான். கண்டியை வந்தடைந்த சூசாவின் எதிர்பார்ப்பு யாவும் சுக்குநூறாகியது. கண்டி அரசன் சீதாவாக்கை அரசனுக்குப் பட்சமாக இருந்தான்.

**2** இது தொடர்பாக யாழ்ப்பாணத்திலிருந்து இளவரசன் கூறியவை யாவும் உண்மை எனச் சூசா உணர்ந்து கொண்டான். போர்த்துக்கேயர் விட்ட தவறுகள் காரணமாகவே கண்டி அரசன் இவ்விதம் நடந்து கொண்டதாக நினைத்தான். கோட்டே மற்றும் சீதாவாக்கை இராச்சியத்துடன் போரிடுவதென்பது முடியாத காரியம் என உணர்ந்த கண்டி மன்னன் போர்த்துக்கேயரிடம் விரைவில் தனக்குப் படை உதவி தேவை எனக் கேட்டனுப்பிய போதும் அதனை உரிய நேரத்தில் வழங்க முடியாத நிலையில் போர்த்துக்கேயர் இருந்தனர்.

**3** போர்த்துக்கேயரிடமிருந்து உதவியைப் பெற்றுக் கொள்ளக் கண்டி மன்னன் விக்கிரமபாகு பல பிரயத்தனங்களை மேற்கொண்டான். ஒருமுறை செங்கடகலையில் இருந்த போர்த்துக்கேயர் ஒருவரைத் தன் அரச மாளிகைக்குக் கூட்டி வரச் செய்து அவர் மூலமாவது உதவியைப் பெற முயற்சி செய்தான். அவரின் ஆலோசனைகளைக் கேட்டுக் கோட்டேயிலிருந்த குருவானவர் ஒருவரையும் அரச மாளிகைக்குக் கூட்டி வந்தான். அதுமட்டுமன்றி அரசன் கிறிஸ்தவ மதத்தையும் தழுவியதற்கு அவருக்குப் பல பரிசுப் பொருட்களையும் வழங்கினான்.


**4** இது தொடர்பான விடயங்களைக் கோவாவிலுள்ள பதிலரசனுக்குத் தெரிவித்த போதும் எந்தப் பலனும் கிடைக்கவில்லை. படைகளை அனுப்பி வைக்கவில்லை. விக்கிரமபாகு மன்னன் எதுவும் இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டான். இந்நிலையில் கோட்டே மற்றும் சீதாவாக்கை அரசர் கப்பம் கேட்டு ஆளனுப்பினான். போருக்கு ஆயத்தமானார்கள். இருபத்து நான்காயிரம் பணம், பட்டத்து யானையொன்றும் அதனுடன் இரு யானைகளும் கப்பமாகக் கட்டவேண்டுமென அரசனைக் கேட்டுக் கொண்டார்கள்.

**5** மேலும் பெறுமதி வாய்ந்த மாணிக்கக் கற்களையும் கப்பமாகக் கேட்டான். விக்கரமபாகு அரசனின் மகளைத் தர்மபால மன்னனுக்கு மனைவியாக்க வேண்டுமென்ற பழைய உறுதி மொழியொன்றையும் ஞாபகமூட்டினான். கண்டி மன்னன் இவை அனைத்தையும் நிறைவேற்ற விருப்பம் தெரிவித்தான். இத்தகைய நிலையில் சூசா திரும்பவும் கண்டி மன்னனின் அபிப்பிராயத்தை மாற்ற முனைந்தான்.

**6** ஆனால் சூசாவின் திட்டம் வெற்றி பெறவில்லை. அவர் முப்பது படை வீரருடன் கண்டிக்கு வந்தார். தன்னை ஏமாற்றப் போர்த்துக்கேயர் முயற்சி செய்வதாகக் கண்டி மன்னன் நினைத்தான். ஆனாலும் தன் முயற்சியைக் கைவிடாது மன்னனை எப்படியாவது தன் பக்கம் இழுக்க முயற்சி செய்தான். கோவாவிலுள்ள பதிரைசன் அல்லது அவனது மகன் பெரும் படையொன்றைக் கொண்டு வரும் வரை தன்னால் எதனையும் செய்ய முடியாது எனத் திட்டவட்டமாகக் கூறினான்.

**7** அவ்விதம் வந்தால் கண்டி மக்கள் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்ற இடம் தருவதாகவும் மன்னன் கூறினான். படைகளைக் கொண்டு வந்தால் மன்னன் வாக்களித்தபடி செய்ய வேண்டுமெனவும் சூசா கூறினான். சூசா மற்றும் அவருடன் இருந்த ஆலயக் குருவானவரும் மிக விரைவில் கோவாவிலுள்ள பதிலரசனுக்குக் காரணங்களை விளக்கிச் செய்தி அனுப்பினர்.

**8** இத்தருணத்தில் இந்தியாவில் கடும்போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பதிலரசனுக்கு அனுப்பிய செய்திகேப இலங்கைக்குப் படைகளை அனுப்ப முடியாத நிலை காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு ... 2006 மார்ச் மாதம் 15ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on March 15, 2006